6 வார, வீட்டுப்பாடமற்ற வேத பாடம்

10 இலட்சத்திற்கும் மேலான பிரதிகள் விற்பனையில்

நடைமுறைக்கு ஏற்ற திருமண வாழ்வை கட்டுதல்

கே. ஆர்தர், டேவிட் & பி.ஜெ. லாசன்

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா

40 நிமிட வேத பாடம்

40 நிமிட
வேத பாடம்

நடைமுறைக்கு ஏற்ற திருமண வாழ்வை கட்டுதல்

பிரீசெப்ட்
மினிஸ்ட்ரீஸ்
சொசைட்டி
ஆப் இந்தியா

கே. ஆர்தர், டேவிட் & பி.ஜெ. லாசன்

BUILDING A MARRIAGE THAT REALLY WORKS (TAMIL)

PUBLISHED BY

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA

P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092.

Tel.No- +91-22-65333302

E-mail - preceptindia@rediffmail.com

Website: www.preceptindia.org

Translator : Evg. M. Daniel

WITH PERMISSSION FROM

WATER BROOK PRESS

12265 Oracle Boulevard, Suite 200

Colorado Springs, Colorado 80921

ISBN 978-0-307-45756-1

Copyright © 2001 by Precept Ministries International

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying and recording, or by any information storage and retrieval system, without the written permission of the publisher.

Printed in India

October, 2017

Printed by :
Ebenezar Printing House
No.205, Hind Industrial Estate,
V.S. Marg, Near Shivaji Park, Sea-Face
Dadar West, Mumbai - 400 028.
Tel : 022 - 2446 2632
Email : outworkeph@gmail.com

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா

மக்களை தேவனின் வார்த்தையில் நிலைநாட்டுதல்

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA
THE INDUCTIVE BIBLE STUDY PEOPLE

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா என்பது பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் இன்டர்நேஷனலின் ஒரு அங்கமாகும். வேதாகமத்தை ஆழமாக கற்பதின் மூலம் மக்களை தேவனின் வார்த்தையில் நிலைநாட்டுவதில் இது ஈடுபட்டுள்ளது.

குறிக்கோள்

மக்களை தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டுவது.

தரிசனம்

பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மக்கள் இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் மாதிரிகளாகவும், வேதாகமத்தை ஆழமாக கற்பவர்களாகவும், வேதாகமக் கண்ணோட்டத்தில் உலகத்தை நோக்குகிறவர்களாகவும், திருச்சபைக்கு உண்மையாக ஊழியம் செய்பவர்களாகவும் வாழுதல்.

Contact

for more information about Inductive Bible Studies in your area.

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA
P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092.
Tel.No- +91-22-65333302
E-mail - preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

இந்த வேதபாடத்தை பயன்படுத்துவது எப்படி?

வேதம் கூறுவதை சுயமாகக் கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள ஆனால் ஒன்றுகூடிவர மிகவும் குறைவான நேரமே உள்ள மக்களுக்கு இந்த சிறு-குழு கற்றல் முறை மிகவும் ஏற்றது. உதாரணத்திற்கு, வேலையில் மதிய உணவு இடைவெளியில் கூடும் குழுக்கள், அதிகாலைநேர ஆண்கள் கூடுகை, பெண்கள் வீட்டு ஜெபக்குழு கூடுகை, ஞாயிறுபள்ளி வகுப்பு, மற்றும் குடும்ப தியானவேளையில் பயன்படுத்த இது ஏற்றது. (மேலும் நீண்ட நேரம் செலவிடும் சிறு குழுக்களுக்கும் - அதாவது மாலைநேர குழுக்கள், சனிக்கிழமை குழுக்கள் - ஜெபிக்கவும், ஐக்கியத்திற்கும் மற்ற நிகழ்ச்சிகளோடு, வேத பாடத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கும் குழுக்களுக்கும் இந்தமுறைமை ஏற்றது) குழுவிலுள்ள அனைத்து அங்கத்தினர்களும் கூடிவரும்போதே ஒவ்வொரு பாடத்தினுடைய கற்றல் செயல்முறைகளையும் ஒரேநேரத்தில் முடிக்கும்படி இந்தப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு குழுவாக கற்கும் முறையாக இருந்தாலும், கற்கவும் கலந்துரையாடலை நடத்திச்செல்லவும், உங்களை வழிநடத்த ஒரு உதவியாளர் தேவைப்படுகிறார். (இவரின் செயல்பாடு விரிவுரையாற்றுவதோ, போதிப்பதோ அல்ல. எனினும், இந்த புத்தகம் ஞாயிறு பள்ளி வகுப்பு மற்றும் அதைப்போல் செயல்படும் குழுக்களில் பயன்படுத்தப்படும்போது, போதிப்பவர் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வார பாடத்தோடு தன் உட்கருத்துக்களையும் நேரடியாகப் போதிக்கலாம். நீங்கள், உங்கள் குழுவின் உதவியாளராக, தலைவராக இருப்பின், உங்கள் வேலையை எளிதாக்க உதவிடும் குறிப்புகள்:

- நீங்கள் உங்கள் குழுவை நடத்தும் முன்பதாக பாடத்தை வாசித்து அதில் அடையாளமிடவும். இது பாடத்துடன் நன்கு அறிமுகமாக்கிக்கொள்ள உதவுவதோடு, மிக எளிமையாக குழுவை நடத்த உதவும். புத்தகத்தில் சொல்லப்பட்டபடி அடையாளக் குறியீடுகளை இடுவது குழுவை நடத்திச்செல்ல எளிதாக்கும். நீங்கள் குழுத்தலைவராயின் ஒவ்வொரு குறியீட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட வண்ணத்தை தேர்ந்தேடுக்கவும்.
- நீங்கள் குழுவை நடத்தும்போது, பாடப்பகுதியின் ஆரம்பத்திலிருந்தே அதிலுள்ளதை சத்தமாக வாசியுங்கள். பாடத்தின் முன்பு அல்லது பின்பு அல்லது இடையில் வரும் "உட்கருத்துக்களையும்" (Insight Box) பாடத்துடன் சேர்த்து வாசியுங்கள். நீங்கள் இணைந்து உற்றுநோக்கி, கற்றுக்கொண்டதை கலந்துரையாடுங்கள். வேத வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, குழுவினர் அடையாளமிடும் வார்த்தையை சத்தமாக சொல்லச்சொல்லுங்கள்.

- கலந்துரையாடல் கேள்விகள் முழு பாடத்தையும் படித்து முடிப்பதற்கே கொடுக்கப்பட்டுள்ளது. வகுப்பு கலந்துரையாடலுக்குள் கடந்து செல்லும்போது, அநேக வேளைகளில், அவர்களே கேள்விகளை புரிந்துகொண்டு கலந்துரையாடுவார்கள். நினைவில் கொள்ளுங்கள், கலந்துரையாடல் கேள்விகள் குழுவை தலைப்பை நோக்கி நடத்திச்செல்லவே கேட்கப்படுகிறது, கலந்துரையாடலை முடிவுக்கு கொண்டுவர அல்ல.
- ஒவ்வொருவரும் தங்கள் பதில்களையும், கண்டுபிடிப்புகளையும் வாய்மொழியாக சொல்வது முக்கியமானது என்று நினைவில்கொள்ளுங்கள். இது ஒவ்வொரு வார பாடத்திட்டத்தில் அவர்களின் தனிப்பட்ட புரிந்துகொள்ளுதலை மிகவும் வலிமையாக்குகிறது. ஒவ்வொரு வார பாடத்தின் கலந்துரையாடலிலும் ஒவ்வொருவரும் பங்குபெறும்படி போதுமான அளவு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.
- கலந்துரையாடல் நகர்ந்து செல்லட்டும், கற்கும்போது அவசியமான இடங்களில் சற்று நேரம் அதிகமாக செலவழிக்கலாம் என்பதே இதன் பொருள். தேவைப்பட்டால், பாடத்தை ஒரு கூட்டத்தொடருக்கும் மேலாக தொடர்ந்து எடுத்துக்கொண்டு செல்லலாம். எனினும், செல்லும் வேக அளவை மிகவும் குறைத்துவிட வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் உற்சாகம் குறைவதால் மக்கள் விட்டுவிடுகின்ற பகுதியில் நேரம் செலவிடப்படுவதைவிட, குழுவினர் எல்லாரும் "அதிகமாக விரும்பும்" பகுதிக்கு கொண்டுசெல்வதே நல்லது.
- சில பதில்கள் தகுதியானதும், சரியானதும் என்பது கேள்விக்குரியதாயிருப்பின், நீங்கள் மென்மையாகவும் மகிழ்ச்சியுடனும் குழுவினருக்கு வேதவாக்கியங்களின் சத்தியத்திற்கு நேராகவே கவனம் இருக்கும்படி நினைவுபடுத்துங்கள். உங்கள் முக்கிய நோக்கம் வேதம் என்ன சொல்கிறது என்பதை கற்றுக்கொள்வதே, மனித தத்துவங்களோடு ஒன்றிப்போவது அல்ல. உண்மையில் வேத வாக்கியங்களை வாசித்து, ஒவ்வொருவருக்கும் அவருடைய பதிலை காட்டும்படி தேவனைக் கேளுங்கள்.

நடைமுறைக்கு ஏற்ற திருமண வாழ்வை கட்டுதல்

சிறுவயதில் பெண்பிள்ளைகள், தங்கள் எதிர்காலத் திருமண வாழ்க்கை எப்படியிருக்க வேண்டுமென்று நினைத்து கற்பனையில் "மணமகளைப்போல் உடையலங்காரம்" செய்துகொண்டு விளையாடுவதுண்டு. மேலும் சிறு பெண்பிள்ளைகள், சிறு பையன்களுடன் சேர்ந்து கொண்டு "வீடு என்ற அப்பா அம்மா" விளையாட்டும் விளையாடி மகிழ்வதுண்டு. அப்பா வேலைக்குச் செல்வதும், அம்மா வீட்டில் சமையல் வேலையைச் செய்வதும், சிறு குழந்தைகளைக் கவனித்துக்கொள்வதும் போன்று நடிப்பார்கள். அப்பா வீட்டுக்கு வந்தவுடன் அம்மாவுக்கு முத்தம் கொடுப்பதும், பின்பு அவர்கள் இரவு உணவுக்காக உட்கார்ந்தபின், அந்த நாளின் முக்கிய நிகழ்வுகள் பற்றியும் பேசிக்கொள்வார்கள்.

கள்ளங்கபடமில்லாமல் மகிழ்ச்சியான கற்பனைகளோடு சிறு பிள்ளைகளாக நாம் விளையாடிய விளையாட்டு, நிஜமான திருமண வாழ்க்கை என்று வந்தவுடன், நமக்கு உண்டாகும் பொறுப்புகளால் அது மிகவும் கடினமாக இருப்பதாக நாம் காண்கிறோம். இக்காலத்தில் குடும்பம், இல்லறம் போன்ற சொற்களுக்கான வரையறைகள் மிகவும் கடினமாக்கப்பட்டுள்ளன, கணவன் - மனைவி உறவு, முன் ஒருபோதும் இல்லாத அளவுக்கு மாபெறும் சவால்களாக மாறிவிட்டன. விவாகரத்து என்னும் பிரச்சனை ஏறக்குறைய நம் எல்லாருக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்புகளை உண்டாக்கிவிட்டது. கூட்டுக் குடும்ப அமைப்பு மற்றும் இருவரும் வேலைக்குச் சென்று சம்பாதிக்க வேண்டிய சூழ்நிலையுள்ள காலமாக தற்காலம் மாறிவிட்டது.

எனவே இந்த நவநாகரிக உலகத்தில், திருமணத்திற்கான தேவனுடைய வடிவமைப்பை நாம் எவ்வாறு செயல்படுத்தப்போகிறோம்? திருமணம் எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது, கணவன் மற்றும் மனைவியின் கடமைகள், அவற்றோடு பேச்சுத் தொடர்பு, அன்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் அடிப்படைக் கொள்கைகளை வரக்கூடிய சில வாரங்களில் நாம் ஆராயப்போகிறோம். இந்த வேதபாடத்தின் மூலம் தேவன் நமக்குள் இருக்க வேண்டுமென நியமித்த திருமண முறையை "மரணம் நம்மைப் பிரிக்கும் வரை" நிலைநிற்கக்கூடிய திருமண முறையை எவ்வாறு செயல்படுத்துவது என்று கண்டுபிடிக்கப்போகிறோம்.

வாரம் ஒன்று

தேவன் வானத்தையும் பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்தபின், அவருடைய சிருஷ்டிப்புகளில் மிகவும் உன்னதமான சிருஷ்டிப்பாகிய மனுஷனையும், ஸ்திரீயையும் உண்டாக்கினார். மற்ற நாட்களின் சிருஷ்டிப்பு விவரங்களைவிட மிகவும் அதிகமான விவரங்கள் ஆறாம் நாள் சிருஷ்டிப்பில் காணப்படுகின்றன. இது மனித சிருஷ்டியாகிய ஆணும் பெண்ணும் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. புருஷனும், ஸ்திரீயும் தேவனுடன் ஒரு தனித்தன்மை வாய்ந்த உறவுக்காகவும் மற்றும் ஒருவருக்கொருவர் தனித்துவமான உறவுடனும் வாழ தேவன் சிருஷ்டித்தார்.

திருமணம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் வடிவமைத்தாரோ அதை அறிந்து கொள்வதற்காக, இந்த வாரப் பாடத்தை ஆரம்பிக்கப்போகிறோம். அது உண்மையாகவே நிரந்தரமான, அர்த்தமுள்ள, இன்பமான உறவாக இருக்க முடியுமா?

உற்றுநோக்கு

ஆதியாகமம் என்பது ஆரம்பங்களின் புத்தகம். நாம் மனுஷனும், ஸ்திரீயும் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்கிற விவரத்தையும், இதன் மூலம் ''திருமணம்'' எவ்வாறு ஆரம்பமாயிற்று என்பதையும் பார்ப்போம்.

தலைவர் : ஆதியாகமம் 1:26-28 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினர் **மனுஷன்** என்ற சொல்லையும், அதே அர்த்தமுள்ள சொற்களையும் அடிக்கோடிடவும்.

கலந்துரையாடு

- ஒவ்வொரு வசனத்திலும் 'மனுஷன்' என்ற சொல்லை அடையாளமிட்டதிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- இந்த வசனங்களிலிருந்து ஆண், பெண் பற்றி என்ன கற்றுக்கொண்டீர்கள்?

ஆதியாகமம் 1:26-28

26.பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக் கடவர்கள் என்றார்.

27.தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

28. பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக்கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

- 28-ம் வசனத்திலுள்ளபடி, தேவன் ஆணுக்கும், பெண்ணுக்கும் என்னென்ன பொறுப்புகளைக் கொடுத்தார்?

- கர்த்தரின் கட்டளைகளை இரண்டு புருஷர்களோ அல்லது இரண்டு ஸ்திரீகளோ செய்ய முடியுமா? திருமணம் பற்றி இந்தப் பகுதி உங்களுக்கு என்ன கூறுகிறது?

- தேவன் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரேமாதிரியான பொறுப்புகளை தந்ததின் முக்கியத்துவம் எதற்காக என்பதைக் கலந்துரையாடவும்.

உட்கருத்து

ஆதியாகமம் 1-ம் அதிகாரம் சிருஷ்டிப்பின் விவரங்களை ஒரு சித்திரம்போல் நமக்குத் தருகிறது. சிருஷ்டிப்பின் முதல் நாளிலிருந்து ஆறாம் நாள்வரை நடந்த சம்பவங்கள் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன. ஆதியாகமம் 2-ம் அதிகாரத்தில் மனித சிருஷ்டிப்பின் விரிவான விவரங்களைத் தேவன் தருகிறார். ஆதியாகமம் 1 மற்றும் 2-ம் அதிகாரங்களில் உள்ள விவரங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். அப்படி நினைப்பது தவறு. அவை சம்பவங்களை வெவ்வேறு கோணத்திலிருந்து விவரிக்கின்றன.

உற்றுநோக்கு

ஆதியாகமம் 2-ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில், மனித சிருஷ்டிப்பின் ஆழமான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தலைவர் : ஆதியாகமம் 2:7-8, 18-20 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **தேவன்** மற்றும் தேவனைக் குறிக்கும் வார்த்தைகளை முக்கோண அடையாளமிடவும். △
- **மனுஷன்,** மனுஷனைக் குறிக்கும் சொற்களை அடிக்கோடிடவும்.

கலந்துரையாடு

- மனுஷன் என்ற சொற்களை அடையாளமிட்டதிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?
- மனுஷனை தேவன் சிருஷ்டித்து, தோட்டத்தில் வைத்தபின் அவனுக்கு என்ன சொன்னார்?
- இந்த வசனங்களின்படி, தேவன் ஸ்திரீயை எதற்காக உண்டாக்கினார்?

ஆதியாகமம் 2:7-8, 18-20

7. தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.

8. தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.

18. பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல; ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.

19. தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகல விதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார்; அந்தந்த ஜீவ ஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று.

20. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ, ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை.

உட்கருத்து

மனுஷனுக்கு ''அவனுக்கு ஏற்ற துணை'' தேவையாயிருந்தது. துணை என்பதற்கான எபிரேயச் சொல்லுக்கு "வேலைக்காரி" அல்லது "அடிமைப்பெண்" என்ற அர்த்தம் இல்லை. தேவன் நமக்கு துணையாளராக இருக்கிறார் என்று வேதத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ள அர்த்தமே இந்த சொல்லுக்கும் அர்த்தமாக உள்ளது. இது இராணுவத்தில் உபயோகிக்கும் சொல்போன்றது. இந்த துணையாளர் என்பவர், மேலான அல்லது சமபலம் உள்ளவராக, முடியாத காலங்களில் ஒருவருக்கு வந்து உதவி செய்பவராக இருப்பார் என்பதாகும். இந்த வேதபகுதியின்படி, புருஷனுக்கு ஏற்ற துணயாக, அவனுக்கு இணையான ஸ்திரீயே தேவைப்படுகிறாள். அப்போதுதான் அவனது பலவீனங்களில் அவள் ஈடுசெய்ய முடியும்.

ஆதியாகமம் 2:21-24

21. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.

உற்றுநோக்கு

தலைவர் : ஆதியாகமம் 2:21-24 வரையுள்ள வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரை **மனுஷி** மற்றும் மனுஷியைக் குறிக்கும் சொற்களை வட்டமிடச் சொல்லவும்.

கலந்துரையாடு

- தேவன் ஸ்திரீயை எவ்வாறு உண்டாக்கினார் என்பதைக் கலந்துரையாடுங்கள்.
- இந்தப் வசனங்களில் நீங்கள் அடையாளமிட்டதிலிருந்து தேவன் ஸ்திரீயைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதை அறிந்துகொள்ள யார், என்ன, எங்கு, எப்பொழுது, ஏன் மற்றும் எப்படி என்ற கேள்வி வாக்கியங்களைக் கேளுங்கள்.
- ஸ்திரீ **ஏன்** சிருஷ்டிக்கப்பட்டாள்?
- புருஷனுடன் ஒப்பிடும்போது, ஸ்திரீ **எப்போது** சிருஷ்டிக்கப்பட்டாள்?
- அவள் **யாருக்காக** சிருஷ்டிக்கப்பட்டாள்? இது **ஏன்** முக்கியமானது?
- 23-ம் வசனத்தின்படி, தேவன் ஸ்திரீயை மனுஷனிடம் கொண்டுவந்தபோது அவன் **என்ன** கூறினான்?
- 24-ம் வசனத்தில் "இதினிமித்தம்" என்பது 21-லிருந்து 23 வரை உள்ள வசனங்களின் விவரங்களைக் குறிக்கிறது. எனவே 24-ம் வசனத்தின்படி, ஒரு தம்பதியாக திருமணம் செய்தபின் எவ்வாறு நடக்க வேண்டும்?

22. தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்.

23. அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான்.

24. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

உட்கருத்து

புருஷன் தன் மனைவியோடு இசைந்திருப்பான் என்பது சில ஆங்கில வேதாகமத்தில் "இணைந்து கொள்ளுதல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, "பசைதடவி, பிரிக்க முடியாமல், கெட்டியாக ஒட்டிக் கொள்வது" என்ற அர்த்தத்தைக் குறிக்கிறது. ஒருவருக்கொருவர் நம்பகத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் இருப்பதைக் குறிக்கிறது.

ஒரு பச்சை நிறக்காகித அட்டையையும், சிவப்பு நிறக்காகித அட்டையையும் பசை தடவி ஒட்டிக் காயவைத்துவிட்டால், ஒரே அட்டைபோலக் கெட்டியாக ஒட்டிக்கொள்ளும். பின்பு அவற்றைத் தனித்தனியாகப் பிய்த்து இழுக்க முயன்றால் என்ன ஆகும்? சேதமில்லாமல் பிரிந்து வந்துவிடுமா? வராது. பச்சை அட்டையில் சில சிவப்புப் பகுதிகள் கிழிந்து ஒட்டிக் கொண்டிருக்கும், சிவப்பு அட்டையிலும் பச்சை நிறத்தின் சில பகுதிகள் கிழிந்து ஒட்டிக் கொண்டிருக்கும். சில இடங்களில் கிழிந்து போய்விடும் வாய்ப்புமுண்டு.

திருமண உறவும் இதே போன்றதுதான் திருமணத்தில் இரு நபர்கள் இணைக்கப்பட்டபின், விவாகரத்து மூலம் "வேதனையே இல்லாமல்" தனியாகப் பிரிந்துபோய்விட முடியும் என்பது நடக்க முடியாத காரியம். பிள்ளைகளே பிறக்காமலிருந்தாலும், கணவனும் மனைவியும் விவாகரத்தால் பிரிக்கப்படும்போது அவர்களது நெருக்கத்தில், உணர்ச்சிகளின் பாசப்பிணைப்பில் மற்றும் பலவற்றில் உறவு கிழித்தெறியப்படுகிறது.

- தேவனுடைய திருமணத் திட்டப்படி "ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என்பது என்ன கருத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது?

- இருவர் திருமணத்தில் 'ஒருவராக' இணைக்கப்பட்டுவிடுகிறார்கள். அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தால் என்ன நடக்கும்?

- மேற்படி உண்மையை அறிந்து கொள்வது திருமண உறவில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும்?

உற்றுநோக்கு

தலைவர் : 1 கொரிந்தியர் 6:15-16 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரை **சரீரங்கள், அவயவங்கள்** மற்றும் அதே அர்த்தமுள்ள சொற்களைச் சுற்றிக் கட்டமிடச் சொல்லவும். ☐

கலந்துரையாடு

- இந்த வசனங்களிலிருந்து பாலுறவு சம்பந்தமாக என்ன கற்றுக் கொண்டீர்கள்?

1 கொரிந்தியர் 6:15-16

15. உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள் என்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.

16. வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே.

மத்தேயு 19:3-10

3. அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்.

4. அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார், என்பதையும்,

5. இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா?

6. இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.

உற்றுநோக்கு

இதுவரை நாம் பார்த்ததிலிருந்து, திருமண உறவு நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதே தேவசித்தம் என்று தெரிகிறது. இதற்கு ஏதாவது விதிவிலக்கு உண்டா?

தலைவர் : மத்தேயு 19:3-10 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரை சத்தமாக வாசித்துக்கொண்டே, கீழ்க்கண்ட அடையாளங்களை வரையச் சொல்லவும்.

- **தேவன்** மற்றும் தேவனைக் குறிக்கும் சொற்களில் முக்கோண அடையாளம் வரையவும். △
- **தள்ளிவிடுதல்** மற்றும் அதே அர்த்தமுள்ள சொற்களின்மேல் ஒரு சாய்வுகோடு வரையவும். /

கலந்துரையாடு

- திருமண உறவு எப்படியிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள்? ஏன்?

- இந்த வசனங்களின்படி, தள்ளிவிடுதலை (விவாகரத்து) மோசே ஏன் அனுமதித்தார்?

- ஒருவர் தன் வாழ்க்கைத் துணைவரை விவாகரத்து செய்ய (தள்ளிவிட) விரும்பினால், அவரது இதயத்தின் நிலை எப்படியிருக்கிறது என்பதை அது வெளிப்படுத்துகிறது?

- 9-ம் வசனத்தின்படி, ஒருவன் அல்லது ஒருத்தி தன் வாழ்க்கைத் துணையை விவாகரத்து செய்துவிட்டு, மறுமணம் செய்து கொண்டால், அவர் என்ன குற்றம் செய்ததாகக் கருதப்படுவார்?

- மேற்கண்ட கட்டளைக்கு, விதிவிலக்குகள் ஏதேனும் இருந்தால் அதனைக் கூறவும்.

- இது உண்மையென்று நீங்கள் எவ்வாறு நம்புகிறீர்கள்?

- இந்தப் போதனையைக் கேட்ட சீஷர்கள் என்ன முடிவுக்கு வந்தார்கள்?

- மேற்கண்ட உண்மைகளை அறிந்து கொள்வது, திருமணம் குறித்த உங்கள் அணுகுமுறையில் எவ்வாறு தாக்கத்தை உண்டாகுகிறது?

7. அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதற் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்.

8. அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங் கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை.

9. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

10. அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: மனைவியைப் பற்றி புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல என்றார்கள்.

மல்கியா 2:13-16

13. நீங்கள் இரண்டாந்தரமும் இதைச் செய்து, கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும், அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள்; ஆகையால், அவர் இனிக் காணிக்கையை மதியார்; அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக் கொள்ளவுமாட்டார்.

14. ஏன் என்று கேட்கிறீர்கள்; கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாய் இருக்கிறார்; உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே

15. அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாய் இருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

உற்றுநோக்கு

விவாகரத்து பற்றி தேவன் எவ்விதமான கருத்தைக் கொண்டிருந்தார் என்பது பற்றிய ஒரு பழைய ஏற்பாட்டுப் பகுதியை நாம் பார்ப்போம்.

தலைவர் : மல்கியா 2:13-16 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரை பின்வருமாறு செய்யச் சொல்லவும்.

- **மனைவி** மற்றும் மனைவியைக் குறிக்கும் சொற்களை வட்டமிடவும்.
- **தள்ளிவிடுதல்** என்ற சொற்களின்மேல் சாய்வுகோடு போடவும்.

கலந்துரையாடு

- தேவன் ஜனங்களிடமிருந்து காணிக்கையை ஏன் ஏற்றுக்கொள்ள மாட்டார்?
- தேவன் காணிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்தபோது ஜனங்கள் என்ன செய்தார்கள்?
- 'தள்ளிவிடுதல்' (விவாகரத்து) என்ற சொற்களை அடையாளமிட்டதிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

உற்றுநோக்கு

இந்த வாரப் பாடத்தை நாம் முடிப்பதற்கு முன்பாக, தேவன் திருமணம்பற்றி என்ன கருத்தைக் கொண்டுள்ளார் என்பதற்கான மற்றொரு வசனத்தையும் ஆராய்வோமாக.

தலைவர் : எபிரேயர் 13:4 வசனத்தைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரை **விவாகம்** என்ற சொற்களைச் சுற்றிக் கட்டம் வரையச் சொல்லவும். ☐

கலந்துரையாடு

- இந்த வசனத்தின்படி திருமணத்தை (விவாகத்தை) எவ்வாறு கருத வேண்டும்?

- திருமணப் படுக்கையை (விவாக மஞ்சத்தை) எது தீட்டுப்படுத்தும்?

- திருமணப் படுக்கையைத் தீட்டுப் படுத்துவோருக்குத் தேவன் என்ன செய்வார்?

- திருமணம் பற்றி இந்த வாரம் என்னவெல்லாம் கற்றுக்கொண்டீர்களோ, அவற்றைச் சுருக்கமாகச் சொல்லிக் கலந்துரையாடவும்.

16. தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்; அப்படிப்பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஆகையால் நீங்கள் துரோகம் பண்ணாமல் உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

எபிரேயர் 13:4

விவாகம் (திருமணம்) யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.

சுருக்கமாக

தேவன் ஆதாமையும் ஏவாளையும் தம்முடன் மிகவும் தனித்துவமான முறையில் உறவுமுறையை வைத்துக்கொள்ளவே சிருஷ்டித்தார். வேறு எந்தச் சிருஷ்டிகளும் தேவனுடன் இப்படிப்பட்ட உறவுமுறையை வைத்துக்கொண்டு சஞ்சரித்துக்கொண்டு மகிழ்ந்திருந்ததில்லை. முதல் தம்பதியர் தேவனுடைய சாயலிலேயே சிருஷ்டிக்கப்பட்டனர், மற்ற எல்லா படைப்புகளின் மேலும் ஆளுகை செய்யும் அதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. தினமும் அவர்கள் தேவனோடு சஞ்சரித்து மகிழ்ந்திருந்தனர்.

துக்ககரமாக, ஆதாமும் ஏவாளும் தவறான தெரிந்து கொள்ளுதலைச் செய்தனர். விலக்கப்பட்ட கனியைப் புசித்ததினால், பாவம் உலகத்தில் பிரவேசித்தது. இது திருமண உறவை எவ்வாறு பாதித்தது என்பதை வரக்கூடிய வாரங்களில் காணப்போகிறோம். இப்போதைக்கு நாம் அறிய வேண்டியதாவது, பாவம் வந்துவிட்டதால் திருமணத்திற்காக அதிக முயற்சி தேவையாகிவிட்டது. எனினும், வாழ்வில் நாம் எவ்வளவோ சவால்களைச் சந்திக்க நேரிட்டாலும் அவற்றையெல்லாம் நாம் ஜெயிப்பதற்கு தேவன் வழிவகை செய்துள்ளார். அதற்கு வாழ்வின் வழிகாட்டியாக வேத புத்தகத்தைத் தந்துள்ளார், அத்துடன் பரிசுத்த ஆவியானவரையும் தந்துள்ளார். அவர் வேத வசனங்களிலுள்ள கட்டளைகளின்படி நடக்க உதவுகிறார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் அந்த வழிநடத்துதலின்படி கவனமாய் நடப்பது மட்டுமே.

திருமண உறவானது நிரந்தரமான, நெருக்கமான இணைப்பாகவும் இருவரும் திரும்ப பிரிக்க முடியாதபடி ஒன்றாக இணைந்து இருக்கவேண்டும் என்றுதான் தேவன் அதனை ஏற்படுத்தியுள்ளார். இயேசுவுக்கும், அவருடைய சபையாகிய மணவாட்டிக்கும் உள்ள உறவை, பூமியில் வெளிப்படுத்திக் காண்பிக்கும் படம்தான் திருமண உறவு. இயேசுவுக்கும் விசுவாசிகளுக்கும் உள்ள இணைபிரியாத உறவை வெளிப்படுத்தும் சாட்சிகள் போன்றவைதான் திருமண உறவுகள். கணவனும் மனைவியும் சண்டைபோட்டுப் பிரிந்து விவாகரத்தை நோக்கிச் சென்றால், தேவன் வரைந்த ஆவிக்குரிய உறவு என்னும் சித்திரம் சிதைந்துபோகிறது. இனிவரும் பாடங்களில் இதுபற்றி அதிகமாகக் கற்றுக்கொள்வோம்.

வாரம் இரண்டு

நம்முடைய சமுதாயம், ஆண்கள் தங்கள் வேலைகளிலும் உடல்சார்ந்த போட்டிகளிலும் எப்படியாவது ஜெயித்துவிட வேண்டும் என்பதற்கே அழுத்தம் கொடுக்கிறது. உறவை மேம்படுத்துவதை முற்றிலும் அலட்சியம் செய்து விடுகிறது. பலர் தங்கள் வாழ்க்கை முழுவதையும் வேலைக்கே கொடுத்துவிடுகிறார்கள், அது அவர்களது உயிரையே அழித்துவிடுகிறது. சராசரியாக ஒரு புருஷன் அந்த நாளின் வேலை முடிந்து வீடு திரும்பும்போது, உணர்வுப் பூர்வமாகவும், மனதளவிலும் முற்றும் களைத்துப்போய் வந்து சேருகிறான். அடிக்கடி அவன் தன் குடும்பத்தை உணர்ச்சிப்பூர்வமாகவும், சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரியவிதத்திலும் மட்டுமல்ல, பொருளாதாரத்திலும்கூட முற்றிலும் கைவிடுகிறான். வேறுசிலர் அதற்கு நேர் எதிரான பாதையைத் தேர்ந்தெடுப்பதுண்டு, வேலைக்குப் போகாமலிருக்க காரணங்களைச் சொல்லி தங்கள் குடும்ப பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமல் அலட்சியம் செய்கிறார்கள்.

இந்த வாரத்தில், திருமண வாழ்வில் கணவனின் கடமைகள் என்ன என்று தேவன் சொல்கிறார் என்பதைப் பார்க்கப்போகிறோம். வேலைக்குப்போவதும், குடும்பத்திற்கு சம்பாதித்துக் கொடுப்பது மட்டும்தான் அவனது ஒரே கடமையா? குடும்பத்தின் தேவைகளையும், விருப்பங்களையும் அலட்சியம் செய்துவிட்டு, அவன் தன் சுயவிருப்பப்படி நேரத்தை செலவழிக்க அவனுக்கு உரிமை உண்டா? இந்தக் கேள்விகளுக்கு வேத வசனங்களிலிருந்து விடைகாண நாம் முயலுவோம்.

உற்றுநோக்கு

இந்தப் பாடத்தை நாம் ஆரம்பிக்கும்போது, தேவன் மனுஷனையும் ஸ்திரீயையும் சிருஷ்டித்தவுடன் அவர்களுக்கு என்னென்ன பொறுப்புகள் வழங்கினார் என்பதை மறு ஆய்வு செய்வோமாக.

தலைவர் : ஆதியாகமம் 2:8-9, 15-25 வசனங்களை வாசிக்கவும்.

- **மனுஷன்** மற்றும் மனுஷனைக் குறிக்கும் சொற்களை அடிக்கோடிடவும்.

ஆதியாகமம் 2:8-9, 15-25

8. தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.

9. தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே

ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்.

15. தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார்.

16. தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.

17. ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

18. பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.

கலந்துரையாடு

- மனுஷனைப்பற்றி இந்தப் பகுதியில் என்னென்ன கற்றுக்கொண்டீர்கள் என்பதைக் கலந்துயையாடவும்.

- வேலை என்ற பகுதியில் மனிதனைக் குறித்து தேவனுடைய திட்டம் என்ன? உறவு என்ற பகுதியில் தேவனுடைய திட்டம் என்ன? உங்கள் பதிலை விவரிக்கவும்.

19. தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ, அதுவே அதற்குப் பேராயிற்று.

20. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை.

21. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.

22. தேவனாகிய கர்த்தர் தாம் மனுனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்.

23. அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்.

24. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்.

25. ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும், நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள்.

1 கொரிந்தியர் 11:3, 8-12

3. ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்.

8. புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள்.

உற்றுநோக்கு

தலைவர் : 1 கொரிந்தியர் 11:3, 8-12 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரைப் பின்வருமாறு செய்யச் சொல்லவும்.

- **புருஷன்** என்ற சொற்களையெல்லாம் அடிக்கோடிடவும்
- **ஸ்திரீ** (மனைவி) என்ற சொற்களையெல்லாம் அடிக்கோடிடவும்.

கலந்துரையாடு

- 1 கொரிந்தியர் 11-ம் அதிகாரத்திலிருந்து புருஷனுக்கும் ஸ்திரீக்கும் இடையிலுள்ள தொடர்பு குறித்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- நீங்கள் படித்ததிலிருந்து, தேவன் ஸ்திரீயை புருஷனைவிடக் கீழான நிலையில் வைத்துள்ளார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? விளக்கமான பதில் தரவும்.

உற்றுநோக்கு

தலைவர் : கலாத்தியர் 3:28 வசனத்தைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **ஆண்** என்ற சொல்லை அடிக்கோடிடவும்.
- **பெண்** என்ற சொல்லை வட்டமிடவும்.

கலந்துரையாடு

- 1 கொரிந்தியரில் உள்ள கருத்துக்கு இந்த வசனம் எவ்வாறு ஒளியூட்டுகிறது?

9. புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்.

10. ஆகையால், தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டு கொள்ளவேண்டும்.

11. ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை.

12. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறது போல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது.

கலாத்தியர் 3:28

யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.

ஆதியாகமம் 3:1-13, 16-24

1. தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.

2. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்;

3. ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு, அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம், என்று சொன்னார் என்றாள்.

4. அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை;

5. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

உற்றுநோக்கு

தலைவர் : ஆதியாகமம் 3:1-13, 16-24 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **புருஷன்** (ஆதாம்) மற்றும் புருனைக் குறிக்கும் சொற்களை அடிக்கோடிடவும்
- **ஸ்திரீ** (மனைவி) மற்றும் ஸ்திரீயைக் குறிக்கும் சொற்களை வட்டமிடவும்.

கலந்துரையாடு

- 'புருஷன்', 'ஸ்திரீ' என்று அடையாளமிட்டதிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- விருட்சத்தின் கனியை முதலில் புசித்தது யார்?

- அவர்கள் கனியைப் புசித்தபோது என்ன நடந்தது?

- ஆதாமும் ஏவாளும் என்ன செய்தார்கள் என்று தேவன் ஆதாமைக் கேள்வி கேட்டபோது, ஆதாமின் பதில் எவ்வாறு இருந்தது?

6. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்: அவனும் புசித்தான்.

7. அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக் கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.

8. பகலில் குளிர்ச்சியான வேளையிலே, தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்.

9. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்.

10. அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாய் இருப்பதினால் பயந்து ஒளித்துக்கொண்டேன் என்றான்.

11. அப்பொழுது அவர்: "நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ?" என்றார்.

12. அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்.

13. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வாஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்.

- ஆதாமின் பதிலிலிருந்தும், தேவனின் பதிலிலிருந்தும், உங்களுடைய திருமணம் சம்பந்தமாக நீங்கள் என்ன கற்றுக்கொள்ள முடியும்?

- ஏவாள் செய்ததுபற்றி தேவன் அவளைக் கேள்வி கேட்டபோது, அவளது பதில் எவ்வாறு இருந்தது?

- பாவத்தில் வீழ்ந்தபின்பு ஆதாமின் நிலை ஏவாளுடன் ஒப்பிடும்போது எப்படியிருக்கும் என்று தேவன் சொன்னார்?

- ஆதாம் தனது செயல்களுக்காக என்னென்ன பிரதிபலனை பெற்றுக் கொண்டான்?

16. அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது, உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார்.

17. பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்து, புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனைப் புசிப்பாய்.

18. அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.

19. நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய், என்றார்.

20. ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.

21. தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி, அவர்களுக்கு உடுத்தினார்.

22. பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி, ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்ய வேண்டும் என்று,

- இதுவரை நீங்கள் வாசித்ததிலிருந்து, குறிப்பாக 16-ம் வசனத்திலிருந்து வாசிக்கையில், புருஷனின் முக்கியமான கடமை என்னவாகத் தோன்றுகிறது? ஏன்?

- ஆதாமும் ஏவாளும் தந்த பதில்களிலிருந்து, திருமணத்தில் செயல் படுத்தக்கூடியதாக நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- பாவத்தில் விழுந்தபின்பு தேவன் ஆதாமின் மேல் வைத்தப் பொறுப்புகள் யாவை? விழுவதற்கு முன்பு இருந்த பொறுப்புகளோடு ஒப்பிடும்போது அவைகள் எப்படிக் காணப்படுகிறது?

உற்றுநோக்கு

முந்தைய பகுதியில் நாம் பார்த்தது என்னவென்றால், மனுஷனுடைய பாவத்தினால் பூமி சபிக்கப்பட்டது. அவன் வேலையைச் செய்து முடிக்க மிக நீண்ட நேரமாகும். ஏனெனில் மனுஷன் தன் குடும்பத்தின் தேவைக்காக சம்பாதிக்க வேண்டிய பொறுப்பைத் தேவன் கொடுத்துவிட்டார். பல ஆண்கள் இந்தக் காரியத்தில் பொறுப்புடன் நடந்து கொள்கிறார்கள். ஆனால் அதிகம் அதிகமான ஆண்கள் தங்கள் பிள்ளைகள் மேல் உள்ள கடமைகளை ஏற்றுக்கொள்ளாமல் ''பொறுப்பற்ற தகப்பன்மார்களாகவே'' இருப்பதைக் கேள்விப்படுகிறோம், அவர்களுடைய குடும்பங்கள் தேவைகளில் இருக்கும்போது, சம்பாதிப்பதில் பெரும் பகுதியை அற்பமான இன்பங்களில் வீணாக்கிவிடுகிறார்கள். இது குறித்து தேவன் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

தலைவர் : பின்வரும் வேதபகுதிகளை வாசியுங்கள். யாத்திராகமம் 34:21; 2 தெசலோனிக்கேயர் 3:6-12 மற்றும் 1 தீமோத்தேயு 5:8. மேலும் குழுவினர்...

- **வேலை** மற்றும் வேலையைக் குறிப்பிடும் ஒவ்வொரு சொற்களையும், **விசாரியாமல்** என்பதையும் கட்டமிடவும். ☐
- **ஒழுங்கற்று** என்னும் சொற்களை அடிக்கோடிடவும். ______

கலந்துரையாடு

- புருஷன் (மனுஷன்) தன் குடும்பத்தின் தேவைகளுக்காக சம்பாதித்துக் கொடுக்க கடமைப்பட்டவன் என்பதுபற்றி, இந்தப் பகுதிகளில் என்ன கற்றுக்கொண்டீர்கள் என்று கலந்துரையாடவும்.

23.அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து, அனுப்பிவிட்டார்.

24.அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.

யாத்திராகமம் 34:21

ஆறுநாள் வேலை செய்து, ஏழாம் நாளிலே ஓய்ந்திருப்பாயாக; விதைப்புக் காலத்திலும் அறுப்புக் காலத்திலும் ஓய்ந்திருப்பாயாக.

2 தெசலோனிக்கேயர் 3:6-12

6. மேலும் சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டும் என்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்.

7. இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும்,

8. ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும், வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்.

9. உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லை என்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டும் என்றே அப்படிச் செய்தோம்.

- வேலை செய்தல் மற்றும் ஒழுங்கற்று நடத்தல் போன்ற சொற்களை அடையாளமிட்டதிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- இந்தப் பகுதிகளிலிருந்து ஒரு மனுஷன் தன் குடும்பத்திற்காகவும், அதிலுள்ள ஒவ்வொருவருக்காகவும் என்னென்ன செய்யக் கடமைப்பட்டிருக்கிறான்?

- தேவன் எதிர்பார்க்கிறபடி ஒரு மனுஷன் நடக்காவிட்டால் என்ன நேரிடும்? இப்படிப்பட்ட மனுஷன் எப்படியிருப்பான் என்று 1 தீமோத்தேயு 5:8-ல் விவரிக்கப்படுகிறான்?

10. ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால், அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே.

11. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப் படுகிறோம்.

12. இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலை செய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்தி சொல்லுகிறோம்.

1 தீமோத்தேயு 5:8

ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாய் இருப்பான்.

1 கொரிந்தியர் 11:3

ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்.

உற்றுநோக்கு

ஒரு புருஷனுக்கு தன் குடும்பத்திலுள்ள மற்றொரு முக்கியமான பொறுப்பு பற்றி இப்போது பார்க்கப்போகிறோம்.

தலைவர் : 1 கொரிந்தியர் 11:3 வசனத்தைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரைப் பின்வருமாறு செய்யச் சொல்லவும்.

- **புருஷன்** என்ற சொற்களை அடிக்கோடிடவும்
- **ஸ்திரீ** என்ற சொல்லை வட்டமிடவும்.

கலந்துரையாடு

- இந்த வசனத்தில் உள்ள அதிகாரத்தின் அமைப்பைச் சித்தரித்துக் காட்டக்கூடிய எளிய படம் ஒன்று வரையவும்.
- ஒவ்வொரு புருஷனுக்கும் தலை யார்? புருஷன் யாருக்கு அடங்கியிருக்கக் கடமைப்பட்டுள்ளான்?
- ஒரு மனுஷன் தேவனுக்கு அடங்கி நடக்காவிட்டால், அவன் தன் மனைவிக்கு எதை வெளிப்படுத்துகிறான்?
- புருஷனை அடங்கி நடக்குமாறு செய்வது யாருடைய பொறுப்பு? கிறிஸ்துவுக்குத் தன் கணவனை அடங்கி நடக்குமாறு செய்வது மனைவியின் பொறுப்பா?

உற்றுநோக்கு

தலைவர் : எபேசியர் 5:22-33 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **புருஷன்** மற்றும் புருஷனைக் குறிக்கும் சொற்களை அடிக்கோடிடவும்.
- **போல, அப்படியே** என ஒன்றையொன்று ஒப்பீடு செய்யும் சொற்களைக் கட்டமிடவும்.

எபேசியர் 5:22-33

22. மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.

23. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

24. ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்.

25. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,

26. தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு, தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,

27. கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல், பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும், தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்.

28. அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்பு கூருகிறான்.

29. தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல, ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்.

30. நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்.

31. இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

உட்கருத்து

புருஷனின் கடமைகள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள அன்பு, போஷித்தல் (Nourish), காப்பாற்றுதல் (Cherish) போன்ற சொற்களின் அர்த்தங்களைப் புரிந்து கொள்வது முக்கியமானதாகும்.

இங்கே 'அன்பு' என்று குறிப்பிடும் சொல் கிரேக்கத்தில் 'அகாப்பே' எனப்படுகிறது. இது நேசிக்கப்படுபவருக்கு மிகச்சிறந்த நன்மைகளைச் செய்ய விரும்பும் நிபந்தனையற்ற அன்பைக் குறிக்கும். கிரேக்கத்தில் உள்ள நிகழ்கால வினைச் சொல்லானது, இது தொடர்ந்து வழக்கமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் என்பதை வலியுறுத்துகிறது. இது ஏதோ உணர்ச்சிவசப்பட்டுச் செலுத்தும் அன்பு அல்ல, இது ஓர் தீர்மானித்து செலுத்தும் அன்பைக் குறிக்கிறது.

'போஷித்தல்' என்பது "போஷி, வளர உதவு, ஊட்டு" என பொருள்படும்.

'காப்பாற்றுதல்' என்பது "சூடேற்று, சூட்டினால் இதமாக்கு, வெதுவெதுப்பாக வைத்திரு" என பொருள்படும். தாய்ப்பறவை தன் குஞ்சுகளைத் தன் இறகுகளின் கீழே வைத்துக்காப்பது நல்ல உதாரணம். அன்புடனும் பாசத்துடனும் அரவணைப்பதை இது குறிக்கும். 29-ம் வசனத்தில் இச்சொல் நிகழ்காலத்தில் இருப்பது, இது தொடர்ந்து வழக்கமாக நடந்துகொண்டே இருக்கும் என்பதைக் குறிக்கிறது.

கலந்துரையாடு

- புருஷனுக்குச் சொல்லப்படும் அறிவுரைகளை அடையாளமிட்டதிலிருந்து என்ன அறிந்து கொண்டீர்கள்?

- இந்தப் பகுதியில் அன்புக்கு எந்த உதாரணத்தைப் பவுல் தருகிறார்?

உட்கருத்து

இந்தப் பகுதியில் கணவர்கள் தத்தம் மனைவிகளிடம் "கிறிஸ்து சபையின்மேல் அன்பாயிருப்பதுபோல" அன்பு செலுத்த வேண்டும். என்று தேவன் கூறுகிறார். ஒரு கணவன் தன் மனைவியை போஷித்துப் பாதுகாக்கவேண்டும். அது அவளுக்குத் தேவை என்பதற்காக மட்டுமல்ல அவன் இயேசுகிறிஸ்து போல் தன்னைக் காட்டவே அப்படிச் செய்யவேண்டும். கிறிஸ்துவாகிய மணவாளன் சபைக்கு எப்படி இருக்கிறாரோ, அதேபோல் ஒரு கணவனும் தன் மனைவியிடம் அப்படி இருக்கவேண்டும். கணவன் ஒரு வாழும் நிரூபமாக எல்லாரும் வாசிக்கக்கூடியவராக காணப்படவேண்டும். ஒரு கணவன் தன் குணத்தாலும், வாழும் விதத்தாலும் இயேசுகிறிஸ்து தம் சபைக்கு காண்பிக்கும் குணம் மற்றும் பணியை வெளிப்படுத்துபவனாக இருப்பான், அல்லது தேவன் விரும்பிய அந்த திருமண வாழ்வு என்ற சித்திரத்தைக் கெடுத்துப் போடுபவனாக இருப்பான்.

- ஒரு புருஷன் தன் மனைவியினிடத்தில் எந்த அளவுக்கு அன்பு செலுத்த வேண்டும்?

32. இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்.

33. எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்பு கூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.

1 பேதுரு 3:7

அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.

கொலோசெயர் 3:19

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்.

எபேசியர் 5:25

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து.

உற்றுநோக்கு

கிறிஸ்துவானவர் சபைக்கு எப்படி இருக்கிறாரோ, அப்படித்தான் புருஷனும் தன் மனைவிக்கு இருக்கவேண்டும் என்பதைப் பார்த்தோம். கிறிஸ்து தம் சபையை நேசிப்பதுபோல, புருஷனும் தன் மனைவியை நேசிப்பதோடு, கிறிஸ்து தலையாக இருப்பதால், புருஷனும், அன்பு வியத்தில் தலையாக இருக்க வேண்டும். திருமணத்தில் புருஷனின் இந்தப் பங்கு பற்றி மேலும் ஆராய்வோம்.

தலைவர் : 1 பேதுரு 3:7; கொலோசெயர் 3:19; எபேசியர் 5:25 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- **புருஷர்களே** என்னும் சொல் மற்றும் அதனை குறிக்கும் சொற்களை அடிக்கோடிடுமாறு குழுவினரிடம் கூறவும்.

கலந்துரையாடு

- இந்த வசனங்களிலிருந்து, புருஷனின் கடமைகள் என்னவென்று கற்றுக்கொண்டீர்கள் என்பதைக் கலந்துரையாடவும்.

- 1 பேதுரு 3:7-ல் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளின்படி ஒரு புருஷன் நடக்காவிட்டால் என்ன நேரிடும்?

- கணவன்மார்களாக, தகப்பன்மார்களாக தங்கள் கடமைகளைத் செய்யாமல் தவிர்க்க, புருஷர்கள் சொல்லும் காரணங்களாக நீங்கள் கேட்டவை எவை?

- இந்த வாரத்தில் கற்றுக்கொண்ட பாடத்தின் உண்மைகளோடு, மேற்படி கண்ட புருஷர்களின் நினைவுகளை ஒப்பிட்டுப்பாருங்கள்.

- ஒரு கணவன் தன் மனைவியை நேசித்து, போஷித்துக் காப்பாற்றுவதற்காகச் செய்யக்கூடிய 5 காரியங்களைக் குறிப்பிடுங்கள்.

சுருக்கமாக

இந்த வாரத்தில் நாம் வாசித்த வசனங்கள் வெளிப்படுத்துவது என்னவென்றால், குடும்பங்களில் மனைவியை நேசிப்பதும், சம்பாதித்துத் தருவதும், கணவன்மார்களின் பொறுப்பு என்று தேவன் நியமித்துள்ளார். தேவன் நியமித்துள்ள திருமணத்தில், கிறிஸ்து சபையை நேசிப்பதுபோல, கணவனும் தன் மனைவியை நிபந்தனையில்லாமல் நேசிக்கவேண்டும். பாவ மனிதர்களுக்காக இயேசு கிறிஸ்து தன் உயிரையே தந்ததுபோல, புருஷர்களும் தன்னையே தந்து, தியாகத்துடன் நேசிக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இது எத்தனை பெரிய அழைப்பு, இது எவ்வளவு அற்புதமான பொறுப்பு.

ஒவ்வொரு கணவனும் தேவனுக்கு அடுத்தபடியாக, தன் குடும்பம் மற்றும் மனைவிக்கே அதிகமான முக்கியத்துவம் கொடுப்பது என்று தீர்மானித்துவிட்டால், என்ன நடக்கும் என்று கற்பனைசெய்ய முடிகிறதா? விவாகரத்து எண்ணிக்கை குறைந்துவிடும். குடும்பங்கள் சீரடையும், சிறுபிள்ளைகள் தாம் வாஞ்சையோடு ஏங்குகிற பாதுகாப்பு, மனநிம்மதி மற்றும் சந்தோம் எல்லாவற்றையும் நிறைவாகப் பெறுவார்கள்.

கணவனே! நீ கிறிஸ்துவின் அன்பையும் தலைமைத்துவத்தையும் வெளிப்படுத்தும் சேவைபுரியும் தலைவனா அல்லது கூக்குரலிட்டு கட்டளையிடும் சர்வாதிகாரியா? இன்று உன் மனைவியை நீ எவ்வாறு உற்சாகப்படுத்தக்கூடும்? இந்த வாரம் படித்த அந்த தெய்வீக அன்பை அவளுக்கு நீ எவ்வாறு காண்பிக்கக்கூடும்? அவளுடைய தேவைகளுக்கெல்லாம் எவ்வாறு நீ உதவிசெய்ய முடியும்? நீ வேலைக்குப்போகிறாயா? இல்லையென்றால், ஏன் வேலைக்குப் போவதில்லை? நீ வேலைக்கே போகாமலிருந்தால், உன் மனைவிக்கும் குடும்பத்துக்கும் அழிவை உண்டாக்குகிறவனாய் இருக்கப் போகிறாயா? சம்பாதித்துக் கொடுப்பவர் என்ற கடமையில் மாத்திரம் குறுகிய கவனம் செலுத்திவிட்டு, நேசிக்கவேண்டும் என்ற உன்னுடைய பொறுப்பை தவறவிட்டுவிட்டாயா?

தேவன் உனக்குக் கொடுத்துள்ள பொறுப்பை பயனுள்ள முறையில் நிறைவேற்றத்தக்கதாக சற்றே சிந்தித்துப்பார்த்து, ஏதாவது ஒரு முக்கிய நடவடிக்கையை இந்த வாரத்தில் நீ எடுப்பாயா?

வாரம் மூன்று

பாரம்பரியமாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இருந்து வந்த பொறுப்புகள், கடமைகள் கடந்த சில வருடங்களில் மாபெரும் சவால்களையும், மாற்றங்களையும் சந்தித்துள்ளன. பெண்கள் தாமாகவே சம்பாதிக்கவும் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ளவும் முடியும் என்று சொல்லப்பட்டுள்ளனர். உணர்வுப்பூர்வமாகவும், பொருளாதார விஷயத்திலும் கணவன்மார்களைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று பெண்கள் தைரியப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் ஒரே நேரத்தில் வேலையையும் பார்த்துக் கொண்டு, குடும்பத்தையும் பார்த்துக்கொள்ளவேண்டும் என்ற நெருக்கடியான சூழ்நிலையில் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த வாரத்தில் திருமணத்தில் பெண்களின் பங்கு என்ன என்று தேவனுடைய சத்தியங்களிலிருந்து நாம் காணப்போகிறோம். இந்தச் சத்தியங்களை நீங்கள் கற்றுக்கொண்டால், உலகத்தின் பொய்கள் என்னும் வலையில் சிக்கிக் கொள்ளாமல் உங்களைக் காத்துக்கொள்ள முடியும்.

உற்றுநோக்கு

ஏற்கனவே நாம் ஆதியாகமம் 1-ல் மனிதனும், ஸ்தீரியும் சிருஷ்டிக்கப்பட்ட விவரங்களைப் பார்த்துள்ளபோதிலும், குடும்பத்தில் ஸ்திரீயின் பங்கு என்ன என்று பார்க்க மீண்டும் அதே பகுதிக்குச் செல்வோமாக.

தலைவர் : ஆதியாகமம் 1:26-28, 2:18, 21-25 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரைப் பின்வருமாறு செய்யச் சொல்லவும்.

- **மனுஷன்** மற்றும் மனுஷனைக் குறிக்கும் சொற்களை அடிக்கோடிடவும்.
- **ஸ்திரீ** (பெண்) என்ற சொற்களையும், அதே அர்த்தமுள்ள சொற்களையும் வட்டமிடவும்.
- **அவர்கள்** என்ற சொற்களை இரட்டை அடிக்கோடிடவும்.

ஆதியாகமம் 1:26-28

26.பின்பு தேவன்: நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், (மீன்கள்) ஆகாயத்துப் பறவைகளையும் மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக் கடவர்கள் என்றார்.

27.தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

28. பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சலக ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

ஆதியாகமம் 2:18. 21-25

18. பின்பு, தேவனாகிய கர்த்தர், மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன், என்றார்

21. அப்பொழுது தேவனாகிய கர்த்தர், ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரை அடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.

கலந்துரையாடு

- 28-ம் வசனத்தில் தேவன் மனுஷனுக்கும், மனுஷிக்கும் கொடுத்த கட்டளை என்ன?

- மனுஷியை சிருஷ்டித்தது யார்?

- அவள் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டாள்?

- அவளுடைய சிருஷ்டிப்பு எந்த விதத்தில் மனுஷனுடைய சிருஷ்டிப்புடன் ஒத்திருக்கிறது? எந்த வகையில் அது மாறுபட்டிருக்கிறது?

- சற்றுமுன் நீங்கள் வாசித்த, அடையாளமிட்ட வசனங்களிலிருந்து, ஸ்திரீயை தேவன் சிருஷ்டித்ததின் முக்கியமான நோக்கம் என்ன?

- இந்த உண்மையை அறிந்துகொள்வது, இன்றைய சமுதாயத்துக்கு மிகவும் முக்கியமானது ஏன் என்று கலந்துரையாடுங்கள்.

22. தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில், கொண்டுவந்தார்.

23. அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான்.

24. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான் அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்.

25. ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள்.

1 பேதுரு 3:7

அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களான படியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.

உற்றுநோக்கு

தலைவர் : 1 பேதுரு 3:7 வசனத்தைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரை **மனைவி** என்ற சொல்லையும், அதே அர்த்தமுள்ள சொற்களையும் வட்டமிடுமாறு கூறவும்.

கலந்துரையாடு

- மனைவியைக் குறிப்பிடும் வார்த்தைகளை அடையாளமிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

ஆதியாகமம் 3:16

அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய், உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார்.

உற்றுநோக்கு

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் புசித்தவுடனேயே அவர்களது சூழ்நிலைகள் தலைகீழாக மாறிவிட்டன. இப்போது அவர்கள் பாவிகளாகிவிட்டார்கள் (ரோமர் 5:12), அவர்களால் தேவனோடு நெருங்கிய உறவு வைத்து மகிழ்ந்திருக்க முடியவில்லை. ஸ்திரீயின் பாவத்தால் வந்த விளைவுகளை ஆதியாகமம் 3:16 விவரிக்கிறது.

தலைவர் : ஆதியாகமம் 3:16 வசனத்தைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **ஸ்திரீ** மற்றும் ஸ்திரீயைக் குறிக்கும் சொற்களை வட்டமிடவும்.
- **ஆசை** என்ற சொல்லைச் சுற்றி மேகம் போன்று வரையச் சொல்லவும்.

கலந்துரையாடு

- ஸ்திரீயின் கீழ்ப்படியாமையினால் ஏற்பட்ட விளைவுகள் என்னென்ன?

உட்கருத்து

இங்கே ஆசை என்று வரும் எபிரேய வார்த்தை வேதத்தில் மூன்று தடவை மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆதியாகமம் 3:16, 4:7 மற்றும் உன்னதப்பாட்டு 7:10-ல் வருகிறது. அதன் அர்த்தம் "ஏங்குதல்" அல்லது "ஏக்கத்துடன் பின்செல்லல்" என்பதாகும். ஒரு வார்த்தையின் சரியான அர்த்தத்தை விளங்கிக்கொள்ள அது உபயோகிக்கப்பட்ட சூழ்நிலையையும் கவனிக்க வேண்டும். இங்கு ஆசை என்ற சொல் பாவம், தீர்ப்பு என்ற சூழ்நிலையின் அடிப்படையில் வருகிறது. எனவே பெரும்பாலான வேதபண்டிதர்கள் நம்புவது என்னவென்றால், பாவத்தினிமித்தமாக ஏவாள் ஆதாமை மேற்கொண்டு, அவனை ஆளுகை செய்ய ஆசைப்படுவாள் (முயற்சிப்பாள்) என்பதே.

உற்றுநோக்கு

தலைவர் : ஆதியாகமம் 4:7 வசனத்தைச் சத்தமாக வாசிக்கவும்.

- ஆசை என்ற சொல்லைச் சுற்றி மேகம் போன்று வரையச் சொல்லவும்.

ஆதியாகமம் 4:7

நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால், பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.

கலந்துரையாடு

- இந்த வசனத்தின் அடிப்படையில், ஆதியாகமம் 3:16ல் உள்ள "உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்" என்ற வாக்கியத்தை விளக்கிக் கூறவும்.

- மனிதனின் வீழ்ச்சிக்குப் பின்பே தேவன் இவ்வாறு கூறியதின் காரணம் என்னவாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

எபேசியர் 5:18-23, 33

18. துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து;

19. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி.

20. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து,

உற்றுநோக்கு

கணவன் - மனைவி உறவு குறித்து விளக்கும் மிக முக்கியமான வேதபகுதியாக எபேசியர் 5:18-33 தான் அநேகமாக இருக்கலாம். இந்த வசனங்களுள் பலவற்றை நாம் சென்ற வாரப்பாடத்தில், திருமணத்தில் கணவனின் பங்கு என்ன என்பதை விவரிக்கும்போது பார்த்தோம். இப்போது திருமணத்தில் மனைவியின் பங்கு என்ன என்பதை பவுல் எவ்வாறு விளக்குகிறார் என்று பார்ப்போம்.

தலைவர் : எபேசியர் 5:18-23, 33 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும், குழுவினர்...

- **மனைவிகளே** மற்றும் மனைவியைக் குறிப்பிடும் சொற்களை வட்டமிடவும்.
- **புருஷன்** மற்றும் அதே அர்த்தமுள்ள சொற்களை அடிக்கோடிடவும்.

உட்கருத்து

21 ம் வசனத்தில் உள்ள 'கீழ்ப்படிந்திருங்கள்', என்பதின் கிரேக்கச் சொல் ஹுப்போடாசோ, அதாவது "அடியில் வை" "கீழாக அடுக்கு" என்று அர்த்தமாகிறது. இந்த வினைச்சொல் நிகழ்காலத்தில் இருக்கிறது. அதாவது தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கவேண்டிய செயலாக, வாழ்க்கையின் ஒரு பழக்கமாக இருக்க வேண்டும்.

கலந்துரையாடு

- இந்த வசனங்களிலிருந்து திருமணத்தில் மனைவியின் பங்கு என்ன என்று கற்றுக்கொண்டீர்கள்? 22,33-ம் வசனங்களின்படி, எந்த இரண்டு காரியங்களைச் செய்யுமாறு மனைவி கட்டளையிடப்பட்டுள்ளாள்?

- 22-ம் வசனத்தின்படி, மனைவி தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது, யாருக்குக் கீழ்ப்படிவதாகவும் கருதப்படும்?

- இந்தப் பகுதியில் நீங்கள் பார்த்ததின் அடிப்படையில், ஒரு புருஷன் தன் மனைவியைக் கீழ்ப்படிந்து நடக்குமாறு கட்டாயப்படுத்த முடியுமா? விளக்கமான பதில் தாருங்கள்.

- இந்தப் பகுதியில் உள்ள விவரங்களை மனதில் வைத்து, ஒரு மனைவி எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று பவுல் எழுதியதின் உள்ளான அர்த்தம் என்ன என்பது பற்றிக் கலந்துரையாடவும். மேலும் சென்ற வாரம் கணவனின் கடமைகள் என்னென்ன என்று கற்றுக் கொண்டதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

21. தெய்வ பயத்தோடே, ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

22. மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.

23. கிறிஸ்து சபைக்கு தலையாய் இருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராய் இருக்கிறார்.

33. எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூருவதுபோல, தன் மனைவியிடத்திலும் அன்பு கூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.

பெண்கள் தவறாக நடத்தப்பட்டாலும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்று பவுல் சொல்லுகிறாரா? ஒரு மனைவி வீட்டுவாசலில் உள்ள மிதியடி போன்றவளா? அல்லது குத்துச்சண்டை வீரரால் குத்தப்படும் மணல் பை போன்றவளா? கணவன் அவளைப் பொய்சொல்லவும், திருடவும், ஏமாற்றவும், விபச்சாரம் செய்யவும் சொன்னால் அவள் செய்துதான் ஆகவேண்டுமா?

- வேதவசனத்தின்படி, கணவனுக்கு மனைவி அடங்கிப் போகவேண்டிய விஷயங்களில் ஏதாகிலும் எல்லை உண்டா? விரிவான பதில் கூறவும்.

கொலோசெயர் 3:18

மனைவிகளே, கர்த்தருக்கு ஏற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்.

உற்றுநோக்கு

திருமண உறவு சம்பந்தமாக, பவுல் கூறியுள்ள மேலும் சில கருத்துக்களையும் நாம் பார்ப்போம், வேதாகம ரீதியான கீழ்ப்படிதல், எப்படி இருக்கும் என்பதைக் காண அவை உதவும்.

தலைவர் : கொலோசெயர் 3:18 வசனத்தை வாசிக்கவும்.

- குழுவினரை **மனைவிகளே** என்ற வார்த்தையை வட்டமிடச் சொல்லவும்.

கலந்துரையாடு

- இந்த வசனத்தின் கருத்து, நாம் வாசித்த எபேசியர் 5:22-23ல் உள்ள கருத்துடன் எப்படி ஒத்துப்போகிறது?

உற்றுநோக்கு

தலைவர் : 1 கொரிந்தியர் 11:3 வசனத்தைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரை **ஸ்திரீ** என்ற சொல்லை வட்டமிடவும், **புருஷன்** என்ற சொற்களை அடிக்கோடிடவும் சொல்லவும்.

கலந்துரையாடு

- மீண்டுமாக, இந்த வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள தலைமைத்துவ மற்றும் கீழ்ப்படிதலின் நிலைகளை விளக்கக் கூடிய எளிய படம் ஒன்றை வரையவும்.

- பிதாவாகிய தேவனோடு, கிறிஸ்துவுக்கு உள்ள உறவு எவ்வாறு உள்ளது?

- யோவான் 10:30-ல், “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' என்று இயேசு சொல்வதாக உள்ளது. இதன் அடிப்படையிலும், இதுபோன்ற பல வசனங்களின் அடிப்படையிலும் பார்க்கும்போது, பிதாவைவிட கிறிஸ்து சற்றே முக்கியத்துவத்தில் குறைந்தவர், அல்லது கீழானவர் என 1 கொரிந்தியர் 11:3 குறிப்பிடுகிறதா?

- அப்படியானால் திருமண உறவில் மனைவியின் நிலை என்ன என்று இப்பகுதி வெளிப்படுத்துகிறது?

1 கொரிந்தியர் 11:3

ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்.

தீத்து 2:3-5

3. முதிர்வயதுள்ள ஸ்தீரிகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்ற விதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர் களுமாயிருக்கவும்,

4. தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்,

5. தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும் படி, அவர்களுக்குப் படிப்பிக் கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர் களுமாயிருக்கவும் முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லு.

நீதிமொழிகள் 31:10-31

10. குணசாலியான ஸ்திரீயைக் கண்டு பிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது.

11. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும், அவன் சம்பத்துக் குறையாது.

உற்றுநோக்கு

தலைவர் : தீத்து 2:3-5 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரை **ஸ்திரீ** மற்றும் **ஸ்திரீகளைக்** குறிப்பிடும் சொற்களை வட்டமிடச் சொல்லவும்.

கலந்துரையாடு

- திருமணமான பெண் (ஸ்திரீ) எப்படிப்பட்ட நடத்தை உள்ளவளாயிருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்?

- அவளுடைய பொறுப்புகள் யஸவை?

உற்றுநோக்கு

தலைவர் : நீதிமொழிகள் 31:10-31 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரை **குணசாலியான ஸ்திரீ** மற்றும் அவளைக் குறிப்பிடும் சொற்களை வட்ட மிடச் சொல்லவும்.

கலந்துரையாடு

- ஸ்திரீயின் பொறுப்புகள் எவைகள் என்று நீங்கள் இந்தப் பகுதியில் கற்றுக்கொண்டீர்களோ, அவைகளைக் குறித்து கலந்துரையாடுங்கள்.

12. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்.

13. ஆட்டுமயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்தோடு வேலைசெய்கிறாள்.

14. அவள் வியாபாரக் கப்பல்களைப்போல் இருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைச் கொண்டுவருகிறாள்.

15. இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள்.

16. ஒரு வயலை விசாரித்து, அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால், திராட்சத் தோட்டத்தை நாட்டுகிறாள்.

17. தன்னைப் பெலத்தால் இடைக் கட்டிக்கொண்டு, தன் கைகளைப் பலபடுத்துகிறாள்.

18. தன் வியாபாரம் பிரயோஜனம் உள்ளதென்று அறிந்திருக்கிறாள்; இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும்.

19. தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள்; அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும்.

20. சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்.

21. தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்பிருகிறதால், தன் வீட்டாரினிமித்தம் குளிருக்குப் பயப்படாள்.

22. இரத்தினக் கம்பளங்களைத் தனக்கு உண்டு பண்ணுகிறாள்; மெல்லிய புடவையும், இரத்தாம் பரமும் அவள் உடுப்பு.

23. அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான்.

24. மெல்லிய புடவைகளை உண்டுபண்ணி விற்கிறாள்; கச்சைகளை வர்த்தகரிடத்தில் ஒப்புவிக்கிறாள்.

25. அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது; வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள்.

- நீதிமொழிகள் 31-ல் “குணசாலியான மனைவிக்கு” உண்டென்று சொல்லப்படும் குணங்களையும், செயல்பாடுகளையும் தற்காலப் பெண் தன் வாழ்வில் எவ்வாறு வெளிப்படுத்த முடியும்?

26.தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது.

27.அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறதென்று கண்ணோக்கமாயிருக்கிறாள்.

28.அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள். அவள் புருஷனும் அவளைப் பார்த்து,

29.அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்.

30.சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.

31. அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள்; அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக் கடவது.

சுருக்கமாக

ஸ்திரீகள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டார்கள். எனினும் பெண்மைக்குரிய விசேஷித்த குணங்களுடன் தேவசாயலில், சிருஷ்டிக்கப்பட்டுள்ளார்கள். மனுஷனிலிருந்து, மனுஷனுக்காக ஸ்திரீ தேவனால் உண்டாக்கப்பட்டாள், தேவன் நியமித்துள்ள ஒரு சிறப்பான பணியினை நிறைவேற்றவே அவள் உண்டாக்கப்பட்டாள். மனைவியானவள் கணவனின் குறைகளை நிறைவாக்கவே இருக்கிறாள், அவனுடன் போட்டிபோடுவதற்கு அல்ல. சரீர அமைப்பில் ஒரு புருஷனைவிட மனைவி வித்தியாசங்களைக் கொண்டிருப்பது மாத்திரமல்ல, உணர்ச்சிவசப்படும் தன்மையிலும் அவள் வித்தியாசங்களைக் கொண்டிருக்கிறாள். இதனாலும், இதுபோன்ற பல காரணங்களினாலும் கணவர்களின் கடமைகளைவிட, வித்தியாசமான கடமைகளையே மனைவியர்களுக்கு தேவன் கொடுத்துள்ளார். ஆனாலும் இருவரும் சமமான முக்கியத்துவமுள்ளவர்களே.

ஆக்கபூர்வமான திருமண வாழ்வை நடத்தவேண்டும் என்றால், பாலின வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு, அவைகள் சுட்டிக் காட்டுகிறதற்கு ஏற்றபடி நடக்கவேண்டும். நாம் தேவ திட்டத்தையும், வழிமுறைகளையும் புரிந்து கொண்டு வாழ ஆரம்பித்தால் அது அநேக திருமணங்களில் வித்தியாசத்தைக் கொண்டுவரும். மிகச் சிறந்த திருமணவாழ்வு வாழவிரும்பினால், அதற்கான தேவதிட்டத்தைக் கனப்படுத்தவேண்டும். அத்திட்டத்தை நீ எதிர்த்துப் போராடினால், தேவனோடு போராடுகிறாய். இப்படிப்பட்ட முரட்டாட்டமான செயல்கள் குடும்பத்தில் அதிருப்தியையும், பிரிவினையையும், இறுதியில் அழிவையும் கொண்டு வந்துவிடும்.

மனைவியர்களாக இயேசுகிறிஸ்துவின் சுபாவத்தையும் பணியையும் உலகுக்குப் பிரதிபலித்துக் காண்பிக்ககூடிய எவ்வளவு பெரிய சிலாக்கியத்தை பெண்கள் பெற்றுள்ளனர். மனைவிகளே! இந்த வாரத்தில் உங்கள் கணவரை எவ்வளவு சிறந்த முறையில் கனப்படுத்தப்போகிறீர்கள்? மேலும் அவரது குறைகளை நிறைவாக்கிட உங்கள் பணியை அதிக திறம்பட நிறைவேற்றப் போகின்றீர்கள்?

தற்காலக் குடும்பங்களிலுள்ள பிரச்சனைகளுக்கான காரணங்களுள் மிக முக்கியமானதாக இருப்பது பேச்சுத்தொடர்பு சம்பந்தமானதுதான். இத்தலைப்பில் ஏராளமான புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. அடிக்கடி மாலைநேரக் காட்சிகளிலும் இத்தலைப்பில் பேசுகின்றனர். பேச்சுத் தொடர்பு குறித்து 'நிபுணர்களின்' ஆலோசனைகள் ஏராளமாக வழங்கப்பட்டுக் கொண்டேயிருந்தபோதிலும், பேச்சுத் தொடர்புப் பிரச்சனைகளினால் ஏராளமான குடும்பங்கள் சிதைந்து கொண்டேயிருக்கின்றன.

இந்தவாரம், நாம் ஒருவருக்கொருவர் பேச்சுத்தொடர்பில் எவ்வாறு நடக்க வேண்டும் என்று தேவன் நினைக்கிறார் மற்றும் ஆலோசனைகளும், கட்டளைகளும் வழங்கியுள்ளார் என்பது பற்றிப் படிக்கப்போகிறோம்.

இப்பாடத்தை நீங்கள் கற்றுக்கொள்ளும்போது, உங்கள் பேச்சு மற்றவர்களை, முக்கியமாக உங்கள் வாழ்க்கைத் துணையையும், பிள்ளைகளையும் எவ்வாறு பாதிக்கிறது என்று வெளிப்படுத்துமாறு தேவனை நோக்கிக் கேளுங்கள். உங்கள் பேச்சிலுள்ள வலிமையான காரியங்கள் என்னவென்று தெரிந்துகொள்ளவும், குறைபாடுகளையும் தோல்வியான பகுதிகளையும் தெரிந்துகொண்டு எப்படி அவைகளைச் சரிசெய்துகொள்ளலாம் என்றும் தேவன் காண்பிக்குமாறு ஜெபியுங்கள்.

உற்றுநோக்கு

நம் சரீர அவயவங்களில் மிகவும் சிறியதாக உள்ள ஒன்று அடக்கியாளவே முடியாததுபோலக் காணப்படுகிறது, அதைப்பற்றிய வேத பகுதியை இவ்வாரம் ஆராயப்போகிறோம். யாக்கோபு 3-ம் அதிகாரம் நாவைப்பற்றிப் பேசுகிறது. நாம் ஒருவரோடொருவர் எவ்வாறு பேசுகிறோம் என்று அங்கே பார்க்கிறோம். 2-ம் வசனத்தில் ஆசிரியர் "நாம் எல்லாரும் அநேக வியங்களில் தவறுகிறோம்" என்கிறார். இது எளிய ஆனாலும் ஆழ்ந்த அறிவுள்ள உண்மையாகும். திருமணங்களில் இதை நாம் மறக்காமல் நினைவில் கொண்டால் எவ்வளவு நலமாயிருக்கும்: நாம் எல்லாரும் தவறுகிறோம் – நாம் ஒவ்வொருவரும் தவறுகிறோம். எனினும், நாம் பரிபூரணத்தை நோக்கி முன்னேற வேண்டும் என்று தேவன் நம்மைத் தூண்டுகிறார்.

யாக்கோபு 3:1-8

1. என் சகோதரரே! அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகரா காதிருப்பீர்களாக,

2. நாம் எல்லாரும் அநேக வியங்களில் தவறுகிறோம். ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷனும் தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக்கூடிய வனுமாயிருக்கிறான்.

3. பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு, அவைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.

4. கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படியோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.

தலைவர் : யாக்கோபு 3:1-8 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரை **நாவு, சொல்** மற்றும் அதே அர்த்தமுள்ள சொற்களை, வளைவு நெளிவான கோடுகளால் அடிக்கோடிடச் சொல்லவும்.

கலந்துரையாடு

- நாவு, சொல் போன்ற சொற்களை அடையாளமிட்டதிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- தன் நாவைக் கடிவாளம்போட்டு அடக்கக்கூடிய மனுஷன் அல்லது மனுஷி எப்படிப்பட்டவர்கள் என்று 2-ம் வசனத்தில் பார்க்கிறீர்கள்?

- 4-6 வசனங்களில், மிகச்சிறிய நாவானது மிகப்பெரிய விளைவுகளை உண்டாக்க முடியும் என்பதை விளக்க, யாக்கோபு இரண்டு உவமைகளைக் காண்பிக்கிறார், இவை பற்றிக் கலந்துரையாடவும்.

- உங்களுக்குத் தெரிந்த ஒரு நபர், மற்றொரு நபரின் வார்த்தையால் நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ பாதிக்கப்பட்ட ஒரு சம்பவத்தை விவரியுங்கள்.

- நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைவருடன் எவ்வாறு பேச வேண்டும் என்பது பற்றி, இந்தப்பகுதி உங்களுக்கு என்ன வெளிப்படுத்துகிறது? நீங்கள் பேசும் வார்த்தைகள் உங்கள் திருமணத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்?

- "தடிகளும் கற்களும் என் எலும்புகளை உடைக்கலாம்; ஆனாலும், வார்த்தைகள் என் இதயத்தைக் காயப்படுத்தவே முடியாது" - என்று நீங்கள் சிறுவயதில் பாடிய பாடலை நினைத்துப் பாருங்கள் இந்த வசனங்களோடு ஒப்பிட்டால், இந்தப்பாடல் உண்மையானதா?

5. அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறியநெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது!

6. நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழு சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப் படுகிறதாயும் இருக்கிறது!

7. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள் நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனு சுபாவத்தால் அடக்கப்படும்; அடக்கப்பட்டதுமுண்டு.

8. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக் கேதுவான விஷம் நிறைந்தது மாயிருக்கிறது.

யாக்கோபு 3:9-12

9. அதினாலே (நாவாலே) நாம் பிதாவாகிய தேவனைத்துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.

10. துதித்தலும், சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது என் சகோதரரே! இப்படியிருக்கலாகாது.

11. ஒரே ஊற்றுக் கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?

12. என் சகோதரரே! அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்க மாட்டாது.

உற்றுநோக்கு

தலைவர் : யாக்கோபு 3:9-12 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- மீண்டும் குழுவினரை **அதினாலே (நாவு) வாய்** போன்ற சொற்களின் கீழே வளைவு நெளிவான அடிக்கோடு வரையச் சொல்லவும்.

கலந்துரையாடு

- 9 மற்றும் 10-ம் வசனங்களில், நாவு மற்றும் வாய்பற்றி எப்படிப்பட்ட முரண்பாடுகள் விவரிக்கப்பட்டுள்ளன?

- நாவின் பிரச்சனை என்ன என்பது பற்றி 11 மற்றும் 12-ம் வசனங்களில் உள்ள இரண்டு உவமைகள் எதை வெளிப்படுத்துகின்றன?

- இந்த வேதபகுதியின்படி, உங்கள் வாயிலிருந்து தவறான வார்த்தைகள் புறப்படுவது, உங்கள் இருதயத்தின் நிலைமை எப்படிப்பட்டது என்று காண்பிக்கும்?

உற்றுநோக்கு

இருதயத்தின் நிறைவினால் மனிதனின் வாய் பேசும் என்று இயேசு கூறினார். "கிணற்றில் உள்ளதுதான் வாளியில் வரும்" (சட்டியில் உள்ளதுதான் அகப்பையில் வரும்) என்று சொல்வோமானால் உங்கள் கிணற்றின் ஆழத்தில் உள்ளது என்ன? புத்துணர்ச்சியூட்டும் தித்திப்பான தண்ணீரா அல்லது வியாதியையும், அழிவையும் உண்டாக்கும் கசப்பான தண்ணீரா? இதற்கான விடை நம் இருதயத்துக்குள்ளேயே இருக்கிறது.

தலைவர் : மத்தேயு 12:33-37 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **பேசு, வாய், வார்த்தைகள்** முதலிய சொற்களின் கீழே வளைவு நெளிவான அடிக்கோடுவரையவும் ～～～～
- **இருதயம்** என்ற சொற்களின்மேல் இருதய படத்தை வரையவும்.

கலந்துரையாடு

- இந்த வேதபகுதியில் முக்கியமான சொற்களை அடையாளமிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- இயேசுவின் வார்த்தைகள் யாக்கோபு 3-ம் அதிகாரத்திலுள்ள வசனங்களுடன் எவ்வாறு இசைந்து செல்கின்றன?

- நாம் நன்மையாக அல்லது தீமையாகப் பேசுவதற்கு மூலகாரணம் என்ன?

மத்தேயு 12:33-37

33. மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும கெட்ட தென்று சொல்லுங்கள். மரமானது அதின் கனியினால் அறியப்படும்.

34. விரியன்பாம்புக்குட்டிகளே! நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.

35. நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான்? பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்.

36. மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையுங்குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக் கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

37. ஏனெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய். அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.

- நாம் பேசும் வார்த்தைகள் எப்படிப்பட்ட வல்லமையைச் சுமந்து செல்கின்றன? 36-37ம் வசனங்களில் எதையும் விட்டுவிடாமல் விளக்கமான பதில் தரவும்.

- நீங்கள் இப்போது வாசித்த பகுதியிலிருந்து, தேவனைக் கனப்படுத்துவதோடு, நம் வாழ்க்கைத் துணைவருக்கும் சேவை செய்யும் விதத்தில் பேசுவது எப்படி? இதை நம் வாழ்வில் எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

யாக்கோபு 1:26

உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால், அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.

உற்றுநோக்கு

தலைவர் : யாக்கோபு 1:26 வசனத்தைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரைப் பின்வருமாறு செய்யச் சொல்லவும்.

- **நாவு** என்ற சொல்லின் கீழே வளைவு நெளிவான அடிக்கோடு வரையவும்.
- **இருதயம்** என்ற சொல்லின் மேல் இருதயம் போன்ற படத்தை வரையவும்.

கலந்துரையாடு

- ஒருவருடைய "தேவபக்திக்கும்" (விசுவாச வாழ்க்கைக்கும்) அவருடைய நாவுக்கும் உள்ள தொடர்பு என்ன?

- உங்களது தேவபக்தி பற்றி உங்கள் நாவு என்ன வெளிப்படுத்துகிறது?

உற்றுநோக்கு

தலைவர் : உங்களுக்காக இப்பக்கத்திலும், மறு பக்கத்திலும் அச்சடிக்கப்பட்டுள்ள பின்வரும் வேதபகுதிகளை, நீதிமொழிகள் 18:21 வரை சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **வாய், உதடு** மற்றும் **பேசுவதைக்** குறிக்கும் சொற்களின் அடியில் வளைவு நெளிவான கோடுகள் வரையவும்.
- **இருதயம்** என்ற சொற்களின் மேல் இருதயப் படத்தை வரையவும்.

கலந்துரையாடு

- ஒவ்வொரு பகுதியிலுமுள்ள வசனங்களைப் படித்து, அதில் கற்றுக்கொண்டவைகள் பற்றிக் கலந்துரையாடவும். உங்கள் திருமண வாழ்வில் இவைகளைக் கடைப்பிடிக்க முடியும் என்பதற்கான சில செயல்முறை உதாரணங்களைக் குறிப்பிடவும்.

- நீங்கள் பேசுகின்ற விதம் எப்படிப்பட்டது என்று விவரிப்பதற்காக, உங்கள் வாழ்க்கைத் துணைவர் இங்குள்ள எந்த வசனத்தைத் தேர்ந்தெடுப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

யோபு 16:5

ஆனாலும் நான் என் வாயினால் உங்களுக்குத்திடன் சொல்லுவேன். என் உதடுகளின் அசைவு உங்கள் துக்கத்தை ஆற்றும்.

நீதிமொழிகள் 4:24

வாயின் தாறுமாறுகளை உன்னைவிட்டு அகற்றி உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து.

நீதிமொழிகள் 11:11

செம்மையானவர்களுடைய ஆசீர்வாதத்தினால் பட்டணம் நிலைபெற்றோங்கும் துன்மார்க்கருடைய வாயினால் அது இடிந்து விழும்.

நீதிமொழிகள் 16:21, 23-24

21. இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகியென்னப்படுவான்; உதடுகளின் மதுரம் கல்வியைப் பெருகப் பண்ணும்.

23. ஞானியின் இருதயம் அவன் வாய்க்கு அறிவையூட்டும்; அவன் உதடுகளுக்கு அது மேன்மேலும் கல்வியைக் கொடுக்கும்.

24. இனிய சொற்கள் தேன் கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஒளதமுமாகும்.

நீதிமொழிகள் 17:27-28

27. அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான். விவேகி குளிர்ந்த மனமுள்ளவன்

28. பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான்; தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்.

நீதிமொழிகள் 18:21

மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும். அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.

உட்கருத்து

திருமணத்திற்கு முன்பதாக, உங்கள் துணையுடன் நீண்டநேரம் பேசி உரையாடிக் கொண்டிருந்ததை நினைத்துப்பாருங்கள். எப்போது தொலைபேசி அழைப்பு வரும் என்று ஆவலுடன் ஏங்கிக் கொண்டிருந்தீர்கள். இனிய உற்சாகமூட்டும் பாராட்டுகளை கேட்கத் துடித்துக் கொண்டிருந்தீர்கள். அந்தக்குரல் உங்கள் காதுகளில் தேனைவிட இனிமையாக ஒலிப்பது வழக்கம்.

அத்துடன் ஒப்பிடும்போது, திருமணமானபின் இப்போது உங்கள் வாழ்க்கைத் துணையுடன் பேசுவது எவ்வாறு இருக்கிறது? நீங்கள் தொலைபேசியில் சுருக்கமாகவும், முக்கிய கருத்தைப்பற்றி மட்டும் பேசுவதாக இருக்கிறதா? உங்களது மாலை நேரங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாகப் பேசுவதில் செலவாகின்றனவா? அல்லது தொலைக்காட்சிப் பெட்டிமுன், கணிணித்திரை முன் நீண்டநேரம் உட்காருவதில் வீணாகின்றனவா? அப்படியானால் ஆரம்பகால உறவின்போது இன்பமாகப் பேசிமகிழ்ந்த அந்த மாலை நேரங்கள் மீண்டும் கிடைக்குமா என்று சந்தேகப்படுகிறீர்களா? முழுமனதோடு முயற்சி செய்தால் நிச்சயம் உங்களால் முடியும். ஆரோக்கியமான, அர்த்தமுள்ள உரையாடல்கள் ஒரே நாளில் நடந்துவிடாது, ஆனால் இது நிச்சயம் சாத்தியமே.

உற்றுநோக்கு

ஒவ்வொரு திருமண உறவிலும் சில கருத்துக்கள் ஒத்துப்போகிறவைகளாகவும் சில கருத்துக்கள் முரண்பாடாகவும் இருக்கும். கருத்து வேறுபாடுகளை இனிமையாக பேசித்தீர்த்துக் கொள்வது ஒரு சிறந்த கலையாகக் கருதப்படும். ஏனெனில் மிகச்சிறிய அவயவமான நாவானது "நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது (யாக்கோபு 3:6). உறவுக்கு சேதம் ஏற்படாத வகையில் கருத்து வேறுபாடுகளைச் சீர்செய்துகொள்வதற்கான நியமங்களை தேவன் உங்களுக்கு தமது வார்த்தையாகிய வேதத்தில் வைத்துள்ளார்.

தலைவர் : இந்தப்பக்கத்திலும், பின்வரும் பக்கங்களிலும் யாக்கோபு 1:19-20 முடிய, அச்சடிக்கப்பட்டுள்ள வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரைப் பின்வருமாறு அடையாளமிடச் சொல்லவும்.

- **சொல், வார்த்தை, வாய்** மற்றும் **பேசுதலைக்** குறிக்கும் சொற்களின் கீழ் வளைவு நெளிவான அடிக்கோடு வரையவும்.
- **மனம்** என்ற சொல்லை இருதயப் படத்தால் குறிக்கவும்.
- **கோபம்** (உக்கிரம்), **எரிச்சல்** என்ற சொற்களைக் கட்டமிடவும். ☐

நீதிமொழிகள் 15:1

மெதுவான பிரதியுத்தரம் (பதில்) உக்கிரத்தை (கோபத்தை) மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.

நீதிமொழிகள் 15:28

நீதிமானுடைய மனம் பிரதியுத்தரம் சொல்லயோசிக்கும்; துன்மார்க்கனுடைய வாயோ தீமைகளைக் கொப்பளிக்கும்.

நீதிமொழிகள் 18:13

காரியத்தைக் கேட்கும் முன் உத்தரம் (பதில்) சொல்லுகிறவனுக்கு அது புத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும்!

எபேசியர் 4:26

நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது.

எபேசியர் 4:29-31

29.கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால், அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள்.

30. அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.

31. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத்துர்க் குணமும் உங்களைவிட்டு நீங்கக் கடவது.

கொலோசெயர் 4:6

அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு (பதில்) சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயும் இருப்பதாக.

கலந்துரையாடு

- நம் வாழ்க்கைத் துணைவரிடமோ (அல்லது மற்றவரிடமோ) நமக்கு கருத்து வேறுபாடு வரும்போது நல்லமுறையில் பேசித்தீர்த்துக்கொள்ள, தேவன் தந்துள்ள வழிமுறைக் கொள்கைகள் எவ்வாறு உதவுகிறது என்று இவ்வசனங்களில் ஒவ்வொன்றாகக் கலந்துரையாடுங்கள்.

- இந்தப் பகுதியிலுள்ள ஆலோசனைகளுள் எது உங்களுக்கு மிகவும் கடினமாகத் தோன்றுகிறது? ஏன்?

யாக்கோபு 1:19-20

19. ஆகையால், என்
பிரியமான சகோதரரே!
யாவரும் கேட்கிறதற்குத்
தீவிரமாயும், பேசுகிறதற்குப்
பொறுமையாயும்,
கோபிக்கிறதற்குத்
தாமதமாயும் இருக்கக்
கடவார்கள்.

20.மனுஷருடைய
கோபம் தேவனுடைய நீதியை
நடப்பிக்க மாட்டாதே.

சுருக்கமாக

தெரிந்தெடுக்கப்பட்ட நல்ல வார்த்தைகளை உபயோகித்தால், அது சிறுபிள்ளையின் வாழ்க்கையையே மாற்றியமைக்க முடியும், சாத்தானை செயலிழக்கச் செய்துவிடும், எழும்பும் புயலினை அமரப்பண்ணும், ஒடுக்கப்பட்ட நபர்களைக் கட்டியெழுப்பும், நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையூட்டும். நம் திருமணங்களில் கணவன்மார்களும், மனைவிமார்களும் பேசுவதற்கு முன், சற்று நிதானித்து, யோசித்து, பேசுவார்களானால் என்ன நடக்கும் என்று சற்றே சிந்தித்துப் பாருங்கள்! ஆரோக்கியமான, சரியான உரையாடல் திருமண உறவில் மிக முக்கியமான அங்கமாயிருந்து, தேவனுக்கு மகிமையையும் கனத்தையும் கொண்டுவருவதாயிருக்கிறது.

நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய அளவுக்கு ஏதாவது பேசியிருந்தால், அவற்றை உங்கள் நினைவுக்குக் கொண்டுவருமாறு தேவனை நோக்கிக் கேளுங்கள். உங்கள் இருதயத்தில் ஏதாவது குறைபாடு இருந்தால் அவற்றை வெளிப்படுத்த ஜெபியுங்கள், தேவன் வெளிப்படுத்தியதை முழுவதுமாக சரிசெய்யுங்கள், உங்கள் வாழ்க்கைத் துணையை அவமதித்து, மனம் நோகுமாறு ஏதாவது பேசியிருந்தால், தேவனிடமும் உங்கள் துணைவரிடமும் அறிக்கையிடுங்கள். உடனே உங்கள் பேச்சுத் தொடர்பு முறையையே மாற்றியமைத்துக்கொள்ள ஆரம்பியுங்கள்.

இந்த வாரத்தில் நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைவரோடும், மற்றும் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரோடும் சிறிதுநேரம் சந்தித்துப்பேச முயற்சி செய்யுங்கள். அவர்கள் மனம் புண்படுமாறு ஏதாவது பேசிவிட்டேனா என்று கேளுங்கள். உங்கள் குறைகளை அவர்கள் வெளிப்படுத்தினால் நீங்கள் தற்காக்க முயற்சிக்க வேண்டாம். அவர்களை மனம் நோகச் செய்யும் நோக்கம் உங்களிடம் இல்லாதிருந்திருக்கலாம். எனினும் உங்கள் வார்த்தைகள் அவர்களைப் புண்படுத்திவிட்டன என்பதை நினைவு கூறுங்கள். எனவே உங்களைத் தற்காத்துக்கொள்ள வேண்டாம்.

“மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்தில் உள்ளன” (நீதிமொழிகள் 18:21) என்பதை நினைத்துப் பாருங்கள். உங்கள் வார்த்தைகள் உங்கள் உறவை உயிர்ப்பிக்கவும் முடியும், சாகடிக்கவும் முடியும். நீங்கள் புருஷராயிருந்தாலும், ஸ்திரீயாக இருந்தாலும் உங்கள் நாவை அடக்கியாளக்கூடிய சுத்தமான பக்தியுள்ளவராயிருக்க முயலுங்கள். உங்கள் வார்த்தைகளால் ஜனங்களைக் கட்டியெழுப்ப தீவிரமாக முயற்சி செய்யுங்கள். ஒருவாரம் முயற்சி செய்யுங்கள், பின் என்ன நடக்கிறது என்று பாருங்கள்!

வாரம் ஐந்து

அந்த மூன்றெழுத்து வார்த்தையைவிட அதிகமாக உபயோகப்படுத்தப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட, தாறுமாறாக அர்த்தம் செய்யப்பட்ட, அதிகம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட, வார்த்தை வேறில்லை. அதுதான் காதல் / நேசம். "நான் உன்னை நேசிக்கிறேன்" என்று சொல்லும் அதே பரவசத்துடன் இந்த "சாக்லெட் மிட்டாயையும் நேசிக்கிறேன்" என்றும் நாம் சொல்ல முடியும்.

நாம் அடிக்கடி கேள்விப்படுவது, இந்தத் தம்பதிகள் விவாகரத்து செய்யப்போகிறார்கள், ஏனெனில் அவர்களது "அன்பு (காதல்) தணிந்து போய்விட்டது" என்பதே, என்ன நடந்தது? அன்பு உண்மையிலேயே மறைந்துபோக முடியுமா? நித்தியமான அன்பு என்பது அடையவே முடியாத வெறும் கனவுதானா?

இதற்கான விடை, நீங்கள் எப்படிப்பட்ட அன்புடன் உங்கள் திருமண உறவை வளர்த்துக்கொண்டீர்கள் என்பதில்தான் அடங்கியிருக்கிறது, ஒரு போதும் குறைந்துபோகாத அன்பைப்பற்றி நீங்கள் புரிந்துகொள்வதே அவசியம். இதில் முக்கியமானது உணர்ச்சி வசப்படுவதைவிடக் கீழ்ப்படிதலேயாகும். இந்த உண்மையை நீங்கள் புரிந்துகொண்டு அதன்படியே வாழ்ந்தால், நீங்கள் உங்கள் திருமண வாழ்வைக் கட்டியெழுப்பி "மரணம் நம்மைப் பிரிக்கும்வரை" வாழ்ந்து காண்பிக்க முடியும்.

உற்றுநோக்கு

வேதத்தில் மிக அதிகமாக உபயோகப்படுத்தப்பட்ட சொற்களுள் அன்பும் ஒன்று. அன்பை உண்மையாகவே புரிந்துகொள்ள விரும்பினால், தேவனிடமே நாம் ஆரம்பிக்கவேண்டும். ஏனெனில் அவர் அன்பின் உற்பத்தி ஸ்தானம் மட்டுமல்ல, நாம் ஒருவரிலொருவர் அன்பு செலுத்தவும், அன்பைப் பெற்றுக்கொள்ளவும் நம்மை வடிவமைத்தவரும் அவரே.

தலைவர் : யோவான் 3:16, 1 யோவான் 4:7-21 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **அன்பு** என்ற வருமிடங்களில் இருதய படம் வரையவும்.
- **தேவன்** மற்றும் தேவனைக் குறிக்கும் சொற்களை முக்கோண அடையாளமிடவும்.

யோவான் 3:16

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

1 யோவான் 4:7-21

7. பிரியமானவர்களே! ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம், ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்.

8. அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.

9. தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

10. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

11. பிரியமானவர்களே! தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.

12. தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால்; தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார், அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.

உட்கருத்து

அன்பு என்ற சொல்லுக்கு நான்கு விதமான கிரேக்கச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் அர்த்தத்தை நாம் விளக்கிக் கொண்டால்தான் ஒரு சிலர் ஏன் "காதல் / அன்பு தணிந்துவிட்டது" என்று சொல்கிறார்கள் என்பது புரியும்.

'ஸ்டார்கே' (Storage) என்பது இயற்கையான பாசத்தை அல்லது பிணைப்பைக் குறிக்கிறது. அது ஒருவரிடமுள்ள இயல்பான குணமாக இருக்கிறது. உங்கள் வாழ்க்கைத் துணைக்காக, உங்கள் குழந்தைக்காக, உங்கள் செல்ல நாய்க்காகவும் இயல்பாகவே பொங்கியெழும் பாசத்தைக் குறிக்கும் அன்பு இது. இது மனிதருடைய இயல்பான சுபாவமாக இருக்கிறது. இது வந்து போகக்கூடியதாக இருக்கிறது. இது வேதத்தில் எதிர்மறையான (Negative) அர்த்தத்தில் மட்டுமே 'அஸ்டார்கே' என பயன்படுத்தப்பட்டுள்ளது.

'ஈராஸ்' (Eros) என்பது உணர்ச்சிகரமான அன்பைக் குறிக்கும். இது ஒருவரின் மனதைப் பற்றிப்பிடித்து ஆளுகை செய்யக் கூடியது. காம இச்சையைத் தூண்டும் அன்பு இது. இவ்வகையான அன்பு நம் கலாச்சாரத்திற்கு சான்றாக இருக்கிறது. இது சுயநலத்தை மையமாகக் கொண்டது. எப்படியாவது தனக்கு இன்பம் கிடைக்கவேண்டும் என்பதில் குறியாக இருக்கும். தனக்கு இன்பம் கிடைக்கும் என்றால்தான் பிறருக்கு இன்பத்தை வழங்க விரும்பும். இது நிபந்தனைக்குட்பட்ட அன்பு. இதற்கான கிரேக்கச் சொல் வேதத்தில் எங்கும் காணப்படவில்லை.

'பிலியோ' (Phileo) என்பது சகோதர சிநேகத்தைக் குறிக்கும் அன்பாகும். மிகவும் பிரியமான நட்பை இது குறிக்கிறது, ஒருவருடைய பிரசன்னத்தில் மற்றவர் அளவில்லாத இன்பத்தை உணர்வார்.

(62 ம் பக்க தொடர்ச்சி)

ஈராஸ் என்னும் அன்பைவிட இது சற்று வித்தியாசமானது, இந்த 'பிலியோ' அன்பு பிறரிடமிருந்து பெறவும், பிறருக்குக் கொடுக்கவும் விரும்பும். பிலியோ அன்பானது, இரக்கம், மென்மை, பாராட்டு ஆகியவற்றுக்கு மாறுத்தரம் செய்யும். இது தன்னுடைய மகிழ்ச்சியோடு, பிறரையும் மகிழ்ச்சி செய்வதில் அக்கரை உள்ளதாயிருக்கும்.

'அகாப்பே' (Agape) என்னும் அன்பானது தானாகவே செயல்படும், பிறரிடமிருந்து பதில் வந்தாலும், வராவிட்டாலும் செயல்படும், யோவான் தேவனுடைய அன்பை விளக்க இச்சொல்லைப் பயன்படுத்துகிறார். உலகம் தேவனை அறியாதபோதிலும், தேவன் உலகில் அன்பு கூர்ந்தார் (வச 10). புதிய ஏற்பாட்டில் அகாப்பே அன்பானது சுயநலமற்ற தன்மையைக் குறிக்கிறது. ஏனெனில் பிதா, உலகின் பாவமீட்புக்காக, தமது குமாரனையே தியாக பலியாக ஒப்புக் கொடுத்தார். "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று வேதம் கூறும்போது, அவர் இப்படிப்பட்ட அன்பாகவே இருக்கிறார். நேசிக்கிறவர்கள் பதில் செலுத்தத் தவறினாலும் தேவ அன்பானது கொடுக்கிறது, கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. ஆதித் திருச்சபையானது விசுவாசிகளை உலக மக்களிடமிருந்து வேறுபடுத்திக் காண்பிக்க, இச்சொல்லையே பயன்படுத்திற்று.

தேவன் இவ்விதமாக நம்மிடம் அன்பு கூர்ந்திருப்பதால், நாமும் ஒருவருக்கொருவர் அதேவித அன்பைச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

13. அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும், அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.

14. பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்.

15. இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று, அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனில் தேவன் நிலைத்திருக்கிறார் அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்.

16. தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

17. நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது. ஏனென்றால், அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.

18. அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.

19. அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்.

20. தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமல் இருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?.

21. தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூர வேண்டும் என்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.

கலந்துரையாடு

இந்தப் பகுதியிலுள்ள வசனங்களில் பேசப்பட்டுள்ளதெல்லாம் உட்கருத்துப் பெட்டியில் விவரிக்கப்பட்டுள்ள அகாப்பே என்னும் அன்பு பற்றியே, இதை மனதில் வைத்துக் கொண்டு கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளியுங்கள்:

- இந்தப் பகுதியிலுள்ளபடி, அன்பு எங்கிருந்து ஆரம்பிக்கிறது?
- இப்படிப்பட்ட அன்பு செயல்படாத அன்பா? செயல்படும் அன்பா? உங்கள் பதிலை விவரிக்கவும்.
- இந்தப் பகுதியில் அன்புபற்றி நீங்கள் கற்றுக் கொண்டவைகளை கலந்துரையாடவும்.
- உட்கருத்துப் பெட்டியை மீண்டும் பார்க்கவும். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் எந்த வகையான அன்பை செயல்படுத்திக் காண்பிக்கவேண்டும்?
- சற்றுமுன் நீங்கள் கற்றுக்கொண்ட அன்பானது திருமண வாழ்வில் எவ்வாறு செயல்படுத்தக்கூடியது? திருமணத்திற்கு முன்பு உங்கள் துணைவர் இருந்ததுபோல், திருமணத்திற்கு பின்பாக அவர் இல்லையென்றால் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்? திருமணத்திற்கு முன்பதாக உங்கள் துணைவர் பேசியதுபோல திருமணமானபின் சரியாகப் பேசாவிட்டால் எப்படி நடந்து கொள்வீர்கள்?

- 'ஸ்டார்கே' மற்றும் 'ஈராஸ்' வகை அன்பை நாம் செயல்படுத்த வேண்டும் என்று வேதம் ஏன் கட்டளையிடவில்லை? இவ்வகை அன்புக்கு தேவன் எதிரியா? விளக்கமாக பதில் தரவும்.

உற்றுநோக்கு

தலைவர் : யோவான் 13:34, எபேசியர் 5:25, 27 மற்றும் ரோமர் 13:8-10 வசனங்களை சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரை **அன்பு** என்ற சொற்களின் மேல் இருதயப் படத்தை வரையும்படி சொல்லவும்.

கலந்துரையாடு

- மீண்டும், இங்குள்ள வசனங்களில் 'அன்பு' என்ற சொற்களுக்கு 'அகாப்பே' என்னும் கிரேக்க பதமானது பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு அடையாமிட்ட வசனங்களிலிருந்து அன்பு குறித்து என்ன கற்றுக்கொண்டீர்கள் என்று கலந்துரையாடவும்.

- இப்படிப்பட்ட அன்புக்கு மிகச்சிறந்த உதாரணம் என்ன?

யோவான் 13:34

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

எபேசியர் 5:25, 27

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

ரோமர் 13:8-10

8. ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன் படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.

9. எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும் உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது.

10. அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது.

- மனைவிமார்கள் தத்தம் கணவன்மார்களிடம் அன்புசெலுத்த வேண்டும் என்ற கட்டளை எதுவும் கொடுக்கப்படவில்லை. இதனால் அவர்கள் தங்கள் கணவன்மார்களிடம் அன்பு செலுத்த விதிவிலக்குப் பெற்றுள்ளார்கள் என்று அர்த்தமா? விளக்கமாக விடை தருக.

1 கொரிந்தியர் 13:4-8,13

4. அன்பு நீடிய சாந்தமும், தயவும் உள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது,

5. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது.

உற்றுநோக்கு

'அகாப்பே' என்னும் இந்த அன்பு இன்னும் ஆழமான விதத்தில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை விளங்கிக்கொள்ள, நன்றாய் அறிந்த ஒரு வேதபகுதியான 'அன்பின் அதிகாரத்தில்' நாம் காண்போம்.

தலைவர் : 1 கொரிந்தியர் 13:4-8, 13 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- மீண்டும் குழுவினரை **அன்பு** மற்றும் அன்பைக் குறிக்கும் சொற்களில் இதயப்படத்தை வரையச் சொல்லுங்கள்.

கலந்துரையாடு

- இந்தப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள அன்பின் குணாதிசயங்கள் பற்றிக் கலந்துரையாடவும். ஒவ்வொரு குணாதிசயமும் திருமண வாழ்வுக்கு எவ்வாறு தொடர்புடையதாய் இருக்கிறது என்பதையும் விளக்கவும்.

- உங்கள் அன்பை உங்கள் துணைவருக்கு வெளிப்படுத்துவதற்கான சில செயல்முறை உதாரணங்களைக் குறிப்பிடவும்.

- கிறிஸ்தவக் கணவன்மார்களும், மனைவியர்களும், 1 கொரிந்தியர் 13-ல் விவரிக்கப்பட்டுள்ளபடி ஒருவரையொருவர் அன்புகூர ஆரம்பித்துவிட்டால், அது குடும்பங்களிலும் சபைகளிலும், சமுதாயத்திலும், தேசத்திலும் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டுபண்ணும்?

- இப்படிப்பட்ட அன்பை தேவனைத்தவிர, யாராவது செயல்முறையில் காண்பிக்க முடியுமா? யார்தான் இப்படி அன்புடன் வாழ்ந்து காண்பிக்க முடியும்? விளக்கமான பதில் தருக.

- இந்த வாரத்தில் நீங்கள் கற்றுக்கொண்டவற்றிலிருந்து, யாராவது உங்களிடம் எங்கள் "அன்பு தணிந்துபோய்விட்டது" என்று சொல்வாரானால், அவர் சொல்வதின் கருத்து என்ன? அவரது அன்பு எங்கேதான் போய்விட்டது? விரிவான பதில் தருக.

6. அநியாயத்தில் சந்தோப்படாமல், சத்தியத்தில் சந்தோப்படும்.

7. சகலத்தையும் தாங்கும் சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.

8. அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து போம்; அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போம்; அறிவானாலும் ஒழிந்து போம்.

13. இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.

சுருக்கமாக

இந்தவாரப் பாடத்தில் தேவனுடைய அன்பானது தானாகவே ஆரம்பிக்கிறதாகவும், செயல்படுகிறதாகவும் இருப்பதைக் கண்டோம். தேவன் நம்மைப் பார்த்து "உங்களை நேசிக்கிறேன்" என்று சொல்லிய பின்பும், இயேசு கிறிஸ்துவை நமக்காக ஒப்புக்கொடாமல் இருப்பது முடியாத காரியமே. உண்மையான அன்பு செயலில் வெளிப்பட்டே தீரும்.

அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்ததால்தான் நாம் தேவனிடத்தில் அன்பு செலுத்துகிறோம். அவர் தமது அன்பை சுயநலமற்ற, தியாகபலி மூலம் வெளிப்படுத்தினார். தேவன் தமது பிள்ளைகள் எல்லாரும் அவருடைய அன்பைப் பிரதிபலிக்கும் விதத்தில் அந்த அன்பை வெளிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

தேவன் தமது 'அகாப்பே' அன்பை விசுவாசிகள் எல்லாரும் முழு உலகுக்கும வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டுமென விரும்பினால், அது திருமண உறவிலும் கட்டாயம் காணப்படவேண்டும் என்பதே இதன் அர்த்தம். இப்போது அன்பில் தேவனுடைய அளவு என்ன என்று அறிந்து கொண்டீர்கள். இப்போது நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைவருக்கு வழங்கும் அன்பினை அளவிட்டுப் பாருங்கள். உங்கள் அன்பு அகாப்பே அன்பா? ஈராஸ் அன்பா? அல்லது ஸ்டார்கே அன்பா? உங்கள் அன்பின் வெளிப்பாடுகள் சுயநலமற்றதாக, தியாகம் நிறைந்ததாக உள்ளனவா? அப்படியில்லையென்றால், தேவனைப்போல் உங்கள் துணைவரை நேசிக்குமாறு, உங்களை நீங்கள் சரிப்படுத்திக்கொள்ள ஆயத்தமாய் இருக்கிறீர்களா? நீங்கள் இவ்வகையான அன்புசெலுத்த ஆரம்பித்தபின், உங்கள் துணைவர் சரியான மறுஉத்தரவு செய்யாவிட்டால் நீங்கள் அவரை நேசிப்பதை நிறுத்திக்கொள்வீர்களா? இது சாத்தியமா?

'அகாப்பே' அன்பானது எப்போதும் தீர்மானிக்கக் கூடியதாய் உள்ளது. அதனுடைய ஆதாரம் கீழ்ப்படிதலில் உள்ளது, உணர்ச்சி வசப்பட்டது அல்ல. உங்கள் உணர்வுகள் கோபமாக வெறுப்பாக மாறும்போது, உங்கள் வாஞ்சை மறையும்போது, உங்கள் அன்புக்கான பலனைக் காணமுடியாமல் போகும்போது, நீங்கள் எவ்வாறு செயல்படுவீர்கள்? தேவன் கட்டளையிட்டபடியே அன்பாயிருக்கத் தீர்மானிப்பீர்களா?

வாரம் ஆறு

பணப்பிரச்சனையே திருமண தம்பதிகளின் குடும்ப பிரச்சனைகளுக்கு மிகமுக்கியமான காரணம் என்று குடும்ப ஆலோசகர்கள் தெரிவிக்கிறார்கள். ஒரு தம்பதி அவர்களுடைய பணத்தை எவ்வாறு கையாளவேண்டும் என்பதில் ஒத்துப்போகாவிட்டால், பணத்தில் உண்டாகும் அவர்களுடைய வேற்றுமை உணர்வுகள் மற்ற எல்லாவித உறவுகளிலும் பாதிப்பை உண்டாக்கிவிடும். திருமணம் நன்றாகவே நடந்திருந்தாலும், பொருளாதார நெருக்கடியின் அழுத்தங்கள் தம்பதியரின் வாழ்க்கையையே நசுக்கி அழித்துவிடும். பொருளாதார காரியங்களில் தேவனுடைய ஆலோசனைகள் என்ன என்பதை அறிந்து, அதன்படி நடக்க ஆரம்பித்தால் மேற்கண்ட பிரச்சனைகளை முற்றிலும் தவிர்க்க முடியும். பணப்பிரச்சனைகள் வராமல் நம்மைப் பாதுகாக்கக்கூடிய, ஏற்கனவே வந்துவிட்ட பிரச்சனைகளிலிருந்து நம்மை விடுவிக்கக்கூடிய சில பொருளாதாரக் கொள்கைகள் பற்றி இந்த வாரத்தில் நாம் படிக்கப்போகிறோம்.

உற்றுநோக்கு

உங்கள் பொருளாதாரத் தேவைகள் பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தங்களை நீங்கள் எந்த அளவுக்கு அறிந்தும், அதன்மேல் நம்பிக்கைவைத்தும் இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு இவ்வியத்தில் சரியான மனநிலையும் தொலைநோக்குப் பார்வையும் உள்ளவராயிருப்பீர்கள். இது குறித்து இயேசு என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்ப்போம்.

தலைவர் : மத்தேயு 6:19-21, 24-25, 31-33 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **பொக்கிஷம், உலகப்பொருள்** மற்றும் இதே அர்த்தமுள்ள சொற்களைக் கட்டமிடவும். ☐

- இயேசு தன் பிரசங்கத்தைக் கேட்டவர்களுக்குச் சொன்ன **கட்டளைகளை** அடிக்கோடிடவும்.

மத்தேயு 6:19-21, 24-25, 31-33

19. பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

20. பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

21. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

24. இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப்பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

25. ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று, உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று, உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

31. ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்.

கலந்துரையாடு

- பொக்கிஷம், உலகப்பொருள் போன்ற சொற்களை அடையாளமிட்டதிலிருந்து உங்கள் பொருளாதாரம் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- தேவன் தந்துள்ள ஒவ்வொரு கட்டளையும், இன்று நம் வாழ்வில் எவ்வாறு பொருந்தி வருகின்றன என்று கலந்துரையாடுங்கள். அவற்றுக்கு நாம் கீழ்ப்படியலாம் என்பதற்கான தைரியத்தைத் தருவது எது?

- நாம் எதைச் செய்ய முடியாது என்று இயேசு கூறுகிறார்? ஏன் முடியாது?

- பிதா, தம் பிள்ளைகளுக்குக் கொடுத்துள்ள வாக்குத்தத்தம் என்ன?

- இந்த வாக்குத்தத்தத்துடன் ஏதாவது நிபந்தனையும் உண்டா? இருந்தால் குறிப்பிடவும்.

- நீங்கள் பொக்கிஷத்தை எங்கே சேர்த்து வைக்கிறீர்கள்? பூமியிலா அல்லது பரலோகத்திலா? தேவனைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை உங்கள் பதில் வெளிப்படுத்துகிறது?

- இதைக் குறித்து நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை ஏதாகிலும் உண்டா?

உற்றுநோக்கு

பொருள்களைச் சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும் என்ற மாம்சீக நாட்டத்தை எதிர்க்க வேண்டும் என்றும், அதற்குப் பதிலாக, நம் தேவைகள் சந்திக்கப்பட தேவனையே நம்பியிருக்க வேண்டும் என்றும் இயேசு தம் சீஷர்களுக்கு வலியுறுத்திக் கூறினார். நம் தேவைகள் சந்திக்கப்பட நாம் எங்கே பார்க்க வேண்டும் என்பதை விவரிக்கும் வேறு சில வேத பகுதிகளையும் நாம் பார்ப்போம்.

தலைவர் : பிலிப்பியர் 4:6-7, 11-12, 19; 1 பேதுரு 5:6-7; சங்கீதம் 37:25 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரைப் பின்வருமாறு செய்யச் சொல்லவும்.

- இங்குள்ள **கட்டளைகள்** ஒவ்வொன்றையும் அடிக்கோடிடவும்.

- **தேவன்** மற்றும் தேவனைக் குறிக்கும் சொற்களை முக்கோண அடையாளமிடவும்.

32. இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

33. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

பிலிப்பியர் 4:6-7, 11-12, 19

6. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

7. அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.

11. என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில், நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்.

12. தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும், எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரண மடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.

19. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி, உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

1 பேதுரு 5: 6-7

6. ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

கலந்துரையாடு

- நம் எல்லாருக்கும் அடிப்படை பொருளாதாரத் தேவைகள் உள்ளன. அவைகள் எவ்வாறு சந்திக்கப்பட வேண்டும்?

- தேவன் உங்கள் தேவைகளைப்பற்றி அக்கறை உள்ளவராயிருக்கிறாரா? இதுவரை நீங்கள் படித்துள்ள எல்லாவற்றிலிருந்தும் விளக்கமான பதில் தருக.

- இந்தப்பகுதியில் நமக்கு என்னென்ன கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன? உங்கள் பொருளாதாரத்தோடு அவை எவ்வாறு தொடர்புள்ளவை களாயிருக்கின்றன?

- ஐசுவரியம் அதிகமிருந்தாலும் அல்லது குறைவாக இருந்தாலும், திருமணத்தில் திருப்தியின்மையும் மன அழுத்தங்களும் உண்டாவதின் காரணம் என்ன? இங்கு படித்த வசனங்களுள் உள்ள எந்த சத்தியங்கள் மேற்படி பிரச்சனையைத் தவிர்க்கக் கூடியவை அல்லது தீர்க்கக் கூடியவை?

உற்றுநோக்கு

நீதிமொழிகள் என்னும் புத்தகமானது ஞானம் சம்பந்தமான ஆழ்ந்த கருத்துக்களை பலவிதமான தலைப்புகளில் வைத்துள்ளது. இவற்றுள் பொருளாதாரம், கொடுத்தல் (விதைத்தல்) என்னும் தலைப்புகளும் உண்டு.

தலைவர் : நீதிமொழிகள் 3:9-10, 22:1-2,7; 23:4-5, 28:27 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும், குழுவினரைப் பின்வருமாறு செய்யச் சொல்லவும்.

- **பொருள் (ஐசுவரியம்)** மற்றும் அதே பொருள்பட வரும் சொற்களைக் கட்டமிடவும்.
- **தரித்திரன் (ஏழை)** என்ற சொல்லின் கீழே வளைவு நெளிவான கோடு வரையவும்.

7. அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

சங்கீதம் 37:25

நான் இளைஞனாயிருந்தேன்; முதிர்வயதுள்ளவனுமானேன், ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை.

நீதிமொழிகள் 3:9-10

9. உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு.

10. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்.

நீதிமொழிகள் 22:1-2,7

1. திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது; பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம்.

2. ஐசுவரியவானும் தரித்திரனும் ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள்; அவர்கள் அனைவரையும் உண்டாக்கினவர் கர்த்தர்.

7. ஐசுவரியவான் தரித்திரனை ஆளுகிறான், கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை

நீதிமொழிகள் 23:4-5

4. ஐசுவரியவானாக வேண்டுமென்று பிரயாசப்படாதே; சுயபுத்தியைச் சாராதே.

5. இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்க விடுவானேன்? அது கழுகைப்போல சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக் கொண்டு ஆகாய மார்க்கமாய்ப் பறந்து போம்.

நீதிமொழிகள் 28:27

தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்; தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும்.

- ஐசுவரியம் என்ற சொற்களை அடையாளமிட்டதிலிருந்து உங்கள் தனிப்பட்ட பொருளாதாரம் குறித்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- ஐசுவரியவானாக மாறுவது குறித்து உங்கள் மனநிலை எப்படியிருக்க வேண்டும்? ஏன் அப்படியிருக்க வேண்டும்?
- தரித்திரரைக் குறித்து உங்கள் பொறுப்பு என்ன?
- கடன் வாங்குவது மற்றும் கடன் கொடுப்பது குறித்ததான உங்கள் கொள்கைகள் எப்படியிருக்க வேண்டும்?
- நீங்கள் பணத்தைக் கையாளும்விதம் இவ்வசனங்களில் சொல்லப்பட்டுள்ள ஞானத்தை வெளிப்படுகிறதாக இருக்கிறதா? உங்கள் வருமானங்கள் எல்லாவற்றிலும் இருந்து தேவனைக் கனப்படுத்துகிறீர்களா? பணம் குறித்து உங்கள் மனநிலை இதுவரை எவ்வாறு இருக்கின்றது? இன்று நீங்கள் கற்றுக்கொண்டதிலிருந்து நீங்கள் செய்ய வேண்டிய மாற்றம் ஏதாவது இருக்கிறதா?

உற்றுநோக்கு

நமது சமுதாயம் அதிகமான முக்கியத்துவத்தை நாம் வசதியாக வாழவேண்டும், எதையெல்லாம் சம்பாதிக்க முடியுமோ அதைச் சம்பாதித்துவிடவேண்டும், இன்னும் மேன்மையான நிலையை அடையவேண்டும், பெரிய ஐசுவரியவானாக ஆகிவிட வேண்டும் என்பதற்கே கொடுக்கிறது. வெற்றியுள்ள வாழ்வு பற்றிய உலகத்தின் பார்வைக்கும் வேத வசனங்களுக்கும் எப்படி ஒப்பிட முடியுமென்று பார்ப்போம்.

தலைவர் : 1 தீமோத்தேயு 6:8-10, 17-19 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினர்...

- **பணம் (ஐசுவரியம்)** மற்றும் அதே பொருள்பட வரும் சொற்களைக் கட்டமிடவும்.
- இந்தப் பகுதியிலுள்ள **ஆலோசனைகள் / கட்டளைகளை** அடிக்கோடிடவும்.

கலந்துரையாடு

- பணம் மற்றும் ஐசுவரியத்தை அடைவது குறித்து தேவனுடைய பார்வை எப்படியுள்ளதென்று இந்த வசனங்கள் வெளிப்படுத்துகின்றன?

- இந்தப் பகுதியில் அடையாளமிட்ட ஆலோசனைகளிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள்?

1 தீமோத்தேயு 6:8-10, 17-19

8. உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால், அது போதுமென்று இருக்கக் கடவோம்.

9. ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.

10. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்.

17. இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும்.

18. நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும் தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதார குணமுள்ளவர் களுமாயிருக்கவும்,

19. நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு.

- ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்களைப் பற்றி இந்தப் பகுதியை எழுதும் ஆசிரியர் கூறுவது என்ன? ஏற்கனவே ஐசுவரியவான்களாக இருப்பவர்களைப்பற்றி அவர் கூறிய கருத்துக்கும் இதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

- பொருளாதார "ஞானம்" பற்றிய உலகத்தின் கருத்துக்கள் எந்தெந்த விதத்தில் இந்த வசனங்களின் கருத்துக்களோடு ஒத்துப்போகின்றன? அல்லது முரண்பாடாயிருக்கின்றன?

பிரசங்கி 5:10-20

10. பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப் பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே.

11. பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள்; அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்குப் பிரயோஜனம் என்ன?

உற்றுநோக்கு

ஐசுவரியங்களையும், ஆஸ்திகளையும் சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும் என்னும் கவலையானது நவீன காலப் பிரச்சனைபோலத் தோன்றினாலும், மிகவும் பழமையான புத்தகமாகிய பிரசங்கியை எழுதிய சாலமோன் ராஜா ஞானத்திலும், ஐசுவரியத்திலும் முழு உலகிலும் ஈடு இணை இல்லாதவர். இக்குறிப்பிட்ட பிரச்சனையில் மனிதகுலம் எப்பொழுதும் போராடியுள்ளது என்பதை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

தலைவர் : பிரசங்கி 5:10-20 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- **பணம், ஐசுவரியம்** மற்றும் அதே பொருள்பட வரும் சொற்களைக் கட்டமிடுமாறு குழுவினருக்குச் சொல்லவும்.

கலந்துரையாடு

- 10-ம் வசனத்தில் மனிதர்களைப் பற்றியும், பணம் குறித்தும் சாலமோன் ராஜா ஒரு சிறப்பான கருத்தை வழங்குகிறார். அவர் சொன்னது என்ன?

- எனக்கு இந்த அளவு வருமானம் கிடைத்தால் திருப்தியடைந்துவிடுவேன் என்று நீங்கள் எப்போதாவது சொன்னதுண்டா? பின்பு அந்த அளவு வருமானத்தை அடைந்த உடனேயே, நீங்கள் இன்னும் அதிகமாக வருமானம் வேண்டும் என்று ஏங்கியதுண்டா?

- வேலைசெய்யும் மனிதனுக்கும், பணக்கார மனிதனுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தான் 12-ம் வசனம் காட்டுகிறதா?

12. வேலை செய்கிறவன்
கொஞ்சமாய்ப் புசித்தாலும்,
அதிகமாய்ப் புசித்தாலும்,
அவன் நித்திரை
இன்பமாயிருக்கும்;
செல்வனுடைய பெருக்கோ
அவனைத்தூங்க வொட்டாது.

13. சூரியனுக்குக் கீழே
நான் கண்ட வேறொரு
கொடிய தீங்குமுண்டு;
அதாவது, ஐசுவரியமானது
அதை உடையவர்களுக்கே
கேடுண்டாகும்படி சேகரித்து
வைக்கப்படுவதாம்.

14. அந்த ஐசுவரியம்
விக்கினத்தால் (நஷ்டம்)
அழிந்துபோகிறது; அவன் ஒரு
புத்திரனைப் பெறுகிறான்.
அவன் கையில் யாதொன்றும்
இல்லை.

15. தன் தாயின்
கர்ப்பத்திலிருந்து,
நிர்வாணியாய் வந்தான்;
வந்ததுபோலவே
நிர்வாணயாய்த் திரும்பப்
போவான், அவன் தன்
பிரயாசத்தினால் உண்டான
பலன் ஒன்றையும் தன்
கையிலே எடுத்துக்கொண்டு
போவதில்லை.

16. அவன் வந்த பிரகாரமே போகிறான். இதுவும் கொடுமையான தீங்கு; அவன் காற்றுக்குப் பிரயாசப்பட்டதினால் அவனுக்கு லாபம் என்ன?

17. அவன் தன் நாட்களிலெல்லாம் இருளிலே புசித்து, மிகவும் சலித்து, நோயும் துன்பமும் அடைகிறான்.

18. இதோ, உயிரோடிருக்கும்படி தேவன் அருளிச்செய்த நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து, சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அநுபவிப்பதே நலமும் உத்தமுமான காரியம் என்று நான் கண்டேன், இதுவே அவன் பங்கு.

- 13-15 வசனங்களில் "கொடிய தீங்கு" என்று எது வருணிக்கப்படுகிறது? இதை ஏன் பிரச்சனையாகக் கருதவேண்டும்? உங்கள் "முதலீட்டு திட்டங்களை" இந்த வசனங்கள் விளக்கிக்காட்டுகின்றதா?

- ஐசுவரியவானுடைய பணத்துக்கு என்ன ஆயிற்று? பூமியில் சேர்க்கும் சொத்துக்கள் குறித்து என்ன செயல்முறை உண்மையை இது வெளிப்படுத்துகிறது?

- நீங்களோ, உங்களுக்குத் தெரிந்த நபரோ தவறான தொழிலில் முதலீடு செய்து அல்லது பங்குச் சந்தை போன்றதில் பணத்தை இழந்த அனுபவம் உண்டா? அவற்றை பற்றிக் கலந்துரையாடவும்.

- 15-ம் வசனத்தின்படி ஒரு மனிதனின் வாழ்வு முடியும் நேரத்தில் அவன் சொத்துக்களின் மதிப்பு என்ன ஆகிறது?

- 18-20 வசனங்களின்படி, பண விஷயத்தில் மனிதனின் பொறுப்பு என்ன? பணம் மற்றும் உழைப்பு விஷயத்தில் சரியான மனப்பான்மையுடன் நடந்து கொண்டால் பலன் எப்படி இருக்கும்?

- நீங்கள் இதுவரை தேவனுக்குரிய பொக்கிஷங்களைத் தேடாமல் பூமிக்குரிய பொக்கிஷங்களையே தேடிக் கொண்டிருந்தீர்களா? அப்படியென்றால், அது குறித்து என்ன செய்யப்போகிறீர்கள்?

உற்றுநோக்கு

''அப்படியானால் இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்", என்று இயேசு சொன்னார் (மத்தேயு 22:21). அரசாங்கத்திற்கு வரிகளை நாம் செலுத்த வேண்டிய கடமை நமக்கு உண்டு என்று நினைவுபடுத்த இவ்வசனம் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது. எனினும் தேவனுக்குக் கொடுக்க வேண்டியதை கொடுக்க வேண்டும் என்ற முக்கிய விஷயத்தை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம்.

நாம் நமது வேதபாடத்தை முடிவுக்குக் கொண்டுவரும் இந்த நேரத்தில், நமது வருமானத்தில் ஒரு பங்காகிய தசமபாகத்தை தேவனுக்குச் செலுத்துவது குறித்து தேவன் என்ன சொல்கிறார் என்று பார்ப்போமாக.

தலைவர் : லேவியராகமம் 27:30-32 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- குழுவினரைத் **தசமபாகம், பத்தில் ஒருபங்கு** என்று வரும் ஒவ்வொரு சொற்களையும் கட்டமிடச் சொல்லவும்.

19. தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாய் இருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.

20. அவனுடைய இருதயத்திலே மகிழும்படி தேவன் அவனுக்கு அநுக்கிரகம் பண்ணுகிற படியினால், அவன் தன் ஜீவனுள்ள நாட்களை அதிகமாய் நினையான்.

லேவியராகமம் 27:30-32

30. தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும், தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது.

31. ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன்.

32. கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே, பத்தில் ஒரு பங்காகிறது எல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது.

கலந்துரையாடு

- இங்கு முக்கிய வார்த்தைகளை அடையாளமிட்டதிலிருந்து என்ன கொள்கையை நீங்கள் கற்றுக் கொண்டீர்கள்?

மல்கியா 3:8-12

8. மனுஷன் தேவனைக் வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே.

9. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்.

10. என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசம பாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத்திறந்து, இடங்கொள்ளாமற்போகு மட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

உற்றுநோக்கு

தலைவர் : மல்கியா 3:8-12 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும். குழுவினரைக் கீழ்க்கண்டவாறு செய்யச் சொல்லுங்கள்.

- **தேவன்** மற்றும் **என்னை, என், நான், கர்த்தர்** என்று தேவனைக் குறிக்கும் ஒவ்வொரு சொற்களையும் முக்கோண அடையாளமிடவும்.
- **தசமபாகம், காணிக்கை** என வருமிடங்களில் கட்டமிடச் சொல்லவும்.

கலந்துரையாடு

- இந்த வேதபகுதியில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று சுருக்கமாகக் கலந்துரையாடுங்கள்.
- 10-ம் வசனத்தில் ஜனங்கள் எதைச் செய்யுமாறு கர்த்தர் சொன்னார்?

- ஜனங்கள் கீழ்ப்படிந்தால், கர்த்தர் அவர்களுக்கு என்ன செய்யப்போவதாதச் சொல்லியுள்ளார்?

11. பூமியின் கனியைப்
பட்சித்துப் போடுகிறவைகளை
உங்கள் நிமித்தம்
கண்டிப்பேன், அவைகள்
உங்கள் நிலத்தின் பலனை
அழிப்பதில்லை,
வெளியிலுள்ள திராட்சக்கொடி
பழமில்லாமற்போவது
மில்லை என்று சேனைகளின்
கர்த்தர் சொல்லுகிறார்.

12. அப்பொழுது எல்லா
ஜாதிகளும் உங்களைப்
பாக்கியவான்கள் என்பார்கள்,
தேசம் விரும்பப்படத்
தக்கதாயிருக்கும் என்று
சேனைகளின் கர்த்தர்
சொல்லுகிறார்.

உற்றுநோக்கு

பின்வரும் வேதபகுதியானது, பவுல் கொரிந்திய சபையின் விசவாசிகளுக்கு எழுதியது. இச்சபையானது தேவையுள்ள விசுவாசிகளுக்கு உதவி செய்வதற்காக, பணம் சேர்த்துக்கொண்டிருந்தது.

2 கொரிந்தியர் 9:7-14

7. அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில், நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

8. மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயு மிருக்கும்படியாக தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராய் இருக்கிறார்.

9. வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்.

10. விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்.

தலைவர் : 2 கொரிந்தியர் 9:7-14 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும், குழுவினர்...

- **கொடுத்தல், பணிவிடை, தர்மசகாயம் உதாரகுணம்** போன்ற வார்த்தைகளைக் கட்டமிடவும்.
- பிதாவாகிய **தேவன்,** தேவகுமாரனாகிய **கிறிஸ்து**வைக் குறிக்கும் சொற்களை குறிக்கும் முக்கோண அடையாளமிடவும்.

கலந்துரையாடு

- முக்கிய வார்த்தைகளை அடையாமிட்டதிலிருந்து, கொடுத்தல் சம்பந்தமாக, தேவனைப் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- கொடுப்பவருடைய மனதின் முக்கியத்துவம் பற்றி இந்த வசனங்களிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?
- இந்தப் பகுதியிலுள்ளபடி, தாராளமாய், உற்சாகமாய் கொடுப்பவர்களுக்கு என்ன பலன்கள் கிடைக்கும்? வசனங்களிலுள்ள கருத்துக்களில் ஒன்றையும் விட்டுவிடாமல் பதில் எழுதுங்கள்.

- இன்று கொடுப்பதை அனேக மக்கள் ஓர் ஊழியமாக, ஒரு மகிழ்சியாக எண்ணுகிறார்கள் என்று நினைக்கிறீர்களா? கொடுப்பதால் (தானதர்மம் செய்வது), அதைப் பெறுகிறவர்கள் தேவனை ஸ்தோத்தரிப்பதன் மூலம் தேவனுக்கு மகிமை உண்டாகிறதென்று நாம் உணரத் தொடங்குகிறோமா? விளக்கமான பதில்கள் தருக.

- 13-ம் வசனத்தின்படி, கொடுப்பதற்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித்து அறிக்கை செய்வதற்கும் என்ன சம்பந்தம் உண்டு?

- இந்த வாரம் நீங்கள் கற்றுக்கொண்ட, மிகமுக்கியமான சத்தியம் எது? அதை உங்கள் வாழ்வில் எவ்வாறு கடைபிடிக்கப்போகிறீர்கள்?

- பணம் சம்பந்தமாக இந்த வாரம் நீங்கள் பார்த்த எல்லா விஷயங்களிலிருந்தும் உங்கள் நிலை எப்படியுள்ளது? நீங்கள் உங்கள் பாதுகாப்புக்காக, தேவனைக் காட்டிலும் பணத்தையே அதிகமாக நாடித் தேடினீர்களா? நீங்கள் உங்களுக்காகவே, பூமியில் பொருளைச் சேர்த்துவைத்துக் கொண்டு கர்த்தரை வஞ்சிக்கிறீர்களா? தேவனுடைய கட்டளை என்ன?

11. தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரம் உண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்கள் ஆவீர்கள்.

12. இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே, சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்.

13. அவர்கள் இந்தத் தர்ம சகாயத்தினாலாகிய நன்மையை அனுபவித்து, நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேத்தைக் கீழ்ப்படிதலோடே அறிக்கையிட்டிருக்கிறதினமித் தமும், தங்களுக்கும், மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ் செய்கிறதினிமித்தமும், அவர்கள் தேவனை மகிமைப்படுத்தி;

14. உங்களுக்காக வேண்டுதல் செய்து, தேவன் உங்களுக்கு அளித்த மிகவும் விசேஷித்த கிருபையினிமித்தம் உங்கள் மேல் வாஞ்சையாய் இருக்கிறார்கள்.

சுருக்கமாக

பணத்தைப்பற்றி ஏராளமான விஷயங்கள் வேதத்தில் கூறப்பட்டிருப்பது நமக்குப் பிரமிப்பை உண்டாக்குகிறது. நம் அன்றாட வாழ்வில் பணம் நமக்கு நிச்சயம் தேவைதான் என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார். ஆனாலும் அதற்காக நாம் கவலைப்படுவதை அவர் விரும்பவில்லை, “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள்” (மத்தேயு6:33) என தேவன் கூறுகிறார். இதை நாம் செய்தால், அவர் நம் தேவைகளையெல்லாம் சந்திப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

தேவையுள்ளவர்களுக்கும், சபைக்கும் நீங்கள் தாராளமாகக் கொடுக்கிறீர்களா? உங்கள் தேவைகள் சந்திக்கப்பட கர்த்தரை நம்புகிறீர்களா? அல்லது எரிச்சலோடு கொடுக்கிறீர்களா? உங்கள் காசோலை தேவனுக்கு முதலிடம் தருகிறதா? அல்லது சுயத்துக்கு முதலிடம் தருகின்றதா?

உங்கள் இதயம் எதை நாடுகிறது? நீங்கள் பொக்கிஷங்களைப் பரலோகத்தில் சேர்க்கிறீர்களா அல்லது பூமியில் சேர்க்கிறீர்களா? உங்களுக்கு இருப்பது போதும் என்று நினைக்கிறீர்களா? அல்லது இன்னும் அதிகமதிகமாக வேண்டும் என்று பணத்தை விரட்டிக்கொண்டு, தேவனுடைய நன்மை உங்களுக்குப் போதாது என்று இதன் மூலம் தெரிவிக்கிறீர்களா? தேவன் உங்கள் ஒவ்வொருவரின் தேவையையும், எல்லாருடைய தேவைகளையும் அறிந்துள்ளவர். மேலும் அந்த எல்லாத் தேவைகளையும் அவருடைய பரிபூரணத்திலிருந்து சந்திக்க கூடியவராயிருக்கிறார். ஏற்கனவே அவர் பரலோகத்தில் உங்களுக்கு ஒரு இடத்தை ஆயத்தம் செய்துவிட்டார். இந்தப் பூமியிலும் அவர் உங்கள் தேவைகளைச் சந்திப்பதற்கு நீங்கள் ஏன் அனுமதி தரக்கூடாது?

நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும், தேவனுடைய பொருளாதாரக் கொள்கைகள் உங்கள் பொருளாதார முடிவுகளை வழிநடத்த அனுமதிப்பீர்கள் என்றால், திருமண தம்பதிகள் சந்திக்கும் மன அழுத்தங்களை, உங்கள் வாழ்விலிருந்து முற்றிலும் நீக்கிவிடமுடியும். உங்கள் குடும்பத்தில் ஒற்றுமை பெருகும், ஆசீர்வாதங்கள் பின் தொடரும், தேவனுடைய பொருளாதார ஞானம் உங்கள் திருமண வாழ்வை நடத்திச்செல்ல நீங்கள் இன்று முதல் ஏன் அனுமதிக்கக்கூடாது? நீங்கள் இழப்பதற்கு என்று ஒன்றுமில்லையே!

ஆசிரியர் மற்றும் இந்த ஊழியங்களைக் குறித்து

கே ஆர்தர் ஒரு சர்வதேச வேத போதகராக, ஆசிரியராக, கருத்தரங்கு பேச்சாளராக உலக முழுவதிலும் அறியப்பட்டுள்ளார். மேலும் 'பிரீசெப்ட் ஃபார் லைப்' என்ற ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் 94 மில்லியன் பார்வையாளர்களை உலக முழவதிலும் சந்தித்துள்ளார். நான்கு முறை 'தங்க பதக்க விருதின்' ஆசிரியராகவும், 100 -க்கும் மேற்பட்ட புத்தககங்கள் , மற்றும் வேத பாடங்களுக்கு ஆசிரியராகவும் உள்ளார்.

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனல் (PMI), 1970 -ல் கே மற்றும் அவர் கணவர் ஜேக் என்பவர்களால் சாட்டனூகா, டென்னிஸியி -ல் மக்களை தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டவேண்டும் என்ற தரிசனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இந்த ஊழியம் உலகமுழவதும் சென்று அடைந்துள்ளது. இதனுடன் வேதத்தை பகுத்தாராயும் பயிலரங்குகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகுழுக்களை அமெரிக்கா முழுவதும் கொண்டுள்ளது. PMI ஏறக்குறைய 150 நாடுகளில் வேதத்தை பகுத்தாராயும் பாடங்களை 70 மொழிகளில் மொழியாக்கம் செய்து மக்கள் தேவனுடைய சத்தியத்தை சுயமாகவே கண்டு கொள்ள பயிற்றுவித்துள்ளது.

டேவிட் மற்றும் பி.ஜெ லாசன், பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேனஷலில் 1980 முதல் பணியாற்றி வருகிறார்கள். ஒன்பது வருட மேய்ப்பர் பணிக்குப்பின்பு PMI -ல் முழநேரமாக மாணவர் ஊழியங்களின் இயக்குனராகவும், அதிலுள்ள ஊழியர்களுக்கு பயிற்றுநராகவும் உள்ளார்கள். PMI கருத்தரங்குகள் மற்றும் 'கட்டளையின் மேல் கட்டளை ' (PUP) வீடியோவில் சிறப்பு பேச்சாளராகவும், PUP, NIIS மற்றும் 40 நிமிட வேதபாடங்கள் தொடரிலும் டேவிட் எழதுகிறார். BJ எண்ணற்ற 40 நிமிட வேத பாடங்களில் எழுதியும், இத்தொடர்களின் தலைமை பதிப்பாளராகவும், முன்னேற்ற பணியிலும் உள்ளார். இதனுடன் PMI-ன் பெண்கள் கருத்தரங்குகளில் சிறப்புப் பேச்சாளராகவும் உள்ளார்.

உங்கள் பகுதியில் வேதத்தை பகுத்தாராயும் (Inductive Bible Study) பயிற்சிகளுக்கான கூடுதல் விவரங்களுக்கு பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா -ஐ தொடர்புகொள்ளவும்.

Precept Ministries Society of India
P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092, India
Tel.No: +91-22-65333302
E-mail: preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

40 MINUTE BIBLE STUDIES

No-Homework Bible Studies

That Help You Discover Truth For Yourself













Books available in English, Hindi, Punjabi, Khasi, Marathi, Bengali, Telugu, Kannada, Tamil & Malayalam.

For Full Product Catalogue and Orders Contact:
preceptindia@gmail.com / preceptindia@rediffmail.com
www.preceptindia.org

40 MINUTE BIBLE STUDIES

No-Homework

That Help You



















Bible Studies

Discover Truth For Yourself



















Other powerful study series

New Inductive Study Series

A big picture study, the NISS is ideal for personal study, small groups, Sunday school classes and discipling.







Devotional & Study Tools









Books available in English, Hindi, Punjabi, Khasi, Marathi, Bengali, Telugu, Kannada, Tamil & Malayalam.

For Full Product Catalogue and Orders Contact:
preceptindia@gmail.com / preceptindia@rediffmail.com
www.preceptindia.org

Precept Upon Precept®

Our most intensive Inductive Study series.







Bible Study for Kids

The Discover 4 Yourself® Inductive Bible Studies for Kids help you find out for Yourself what the Bible is all about - and give you exciting ways to do it!





Books available in English, Hindi, Punjabi, Khasi, Marathi, Bengali, Telugu, Kannada, Tamil & Malayalam.

For Full Product Catalogue and Orders Contact:
preceptindia@gmail.com / preceptindia@rediffmail.com
www.preceptindia.org

Bible Study for Kids

The Discover 4 Yourself® Inductive Bible Studies for Kids help you find out for Yourself what the Bible is all about - and give you exciting ways to do it!

















Books available in English, Hindi, Punjabi, Khasi, Marathi, Bengali, Telugu, Kannada, Tamil & Malayalam.

For Full Product Catalogue and Orders Contact:

preceptindia@gmail.com / preceptindia@rediffmail.com

www.preceptindia.org

நீடித்து நிலைக்கும் அன்பை கட்டியெழுப்புவதற்கான வரைபடம்

குடும்ப வாழ்வு பற்றிய பாரம்பரிய கருத்துக்களுக்கு, எதிர்ப்புகள் வந்துகொண்டே இருப்பதால், கணவன் மனைவி உறவானது இதுவரையில் இல்லாத அளவுக்கு, கடுமையான சவால்களை சந்தித்துக்கொண்டிருக்கிறது. மேலும் திருமணத்திற்கு, அதனுடைய மதிப்பைவிட, அதற்கு அதிக முயற்சியே தேவைப்படுகிறது என்று சில கிறிஸ்தவர்கள் வியப்புடன் நினைக்கிறார்கள்.

ஆனால் அது அப்படியிருக்கத் தேவையில்லை. திருமணத்தில், தேவன் விரும்புகிறபடி நாம் வாழ்ந்தால், அது நம்மை திருப்திபடுத்தும், மகிழ்ச்சியைக் கொண்டுவரும், நம் வாழ்விற்கே புது அர்த்தத்தைத் தரும்.

இந்தப் பாடத்தில், திருமணமானது பூரண திருப்தியையும், மனநிறைவையும் அளிப்பதற்கான தேவனுடைய திட்டம் என்ன என்பதை ஆராயப்போகிறீர்கள். கடுமையான பிரச்சனைகளாகிய பொருளாதாரம், பேச்சுத்தொடர்பு, ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்துதல் போன்ற காரியங்களில் இணக்கத்தை, சமாதானத்தை பின்பற்றுவது எப்படி என்ற தேவ ஞானத்தை நீங்கள் கண்டுபிடிக்கப்போகிறீர்கள். மிக முக்கியமாக, நிரந்தரமாக நிலைதிருக்கக்கூடிய அன்பை கட்டியெழுப்புவதற்கான கொள்கைகளை கற்றுக்கொள்ளப்போகிறீர்கள்.

40 நிமிட வேத பாடம்

ஒரு வாரத்தில் 40 நிமிடங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றக்கூடும்!

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனல் குழுவினரின் இந்த 40 நிமிட வேதபாட தொடரானது, உங்களை முக்கியமான தலைப்புகளில் ஊக்கத்துடன் செயல்படவைக்கிறது. இந்த பகுத்தாராயும் முறை வழிகாட்டியானது, வீட்டுப்பாடங்கள் இல்லாமல் வெறும் 40 நிமிடங்களில் முடிக்கக்கூடிய 6 பாடங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்களாகவே ஆராயும்படி தேவன் என்ன சொல்லுகிறார் மற்றும் எப்படி உங்கள் இன்றைய வாழ்க்கையில் செயல்படுத்தக்கூடும் என்றும் உங்களுக்கு உதவிடுகிறது. புத்தகத்தின் வலதுபுறத்தில் அதன் குறிப்பிட்ட வேத வசனங்களுடன் நடத்துபவரின் குறிப்புகளும் உள்ளது, சுயமாகக் கற்கும் ஒவ்வொரு பாடங்களும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் சிறுகுழு கலந்துரையாடலுக்கும் ஒரு வல்லமையான மூலாதாரமாகும்.

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனல், 1970-ல் ஜேக் மற்றும் கே ஆர்தரால் ஆரம்பிக்கப்பட்டது, இலட்சக்கனக்கான மக்கள் தேவனுடைய சத்தியத்தை சுயமாகவே கண்டுகொள்ள பயிற்றுவித்துள்ளார்கள். **Precepts for Life** என்ற ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் 94 மில்லியன் பார்வையாளர்களை உலகமுழுவதும் சந்தித்துள்ளார்கள். இதனுடன் வேதத்தை பகுத்தாராயும் பயிற்சி பயிலரங்குகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு குழுக்கள் அமெரிக்கா முழுதும் கொண்டுள்ளது. **PMI** ஏறக்குறைய 150 நாடுகளில் வேதத்தை பகுத்தாராயும் பாடங்களை 70 மொழிகளில் மொழியாக்கம் செய்துள்ளது.

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA
THE INDUCTIVE BIBLE STUDY PEOPLE

E-mail : preceptindia@rediffmail.com
Website : www.preceptindia.org